# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஜூலை 2002 ஜீவியம் 8 மலர் 3**

இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 21 |
| லைப் டிவைன் | 22 |
| சிறு குறிப்புகள் | 28 |
| அன்பன் பெரிய இடத்துப் பிள்ளை | 30 |
| லைப் டிவைன் - கருத்து | 38 |
| அபரிமிதமான செல்வம் | 41 |
| அன்பர் கடிதம் | 49 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 51 |
| சாவித்ரி | 61 |
| புலன்களுக்குப் புலப்படாதது | 63 |


* * *

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**716) இழந்த உரிமை, உடைமை, சந்தோஷத்தை அன்னை மீட்டுத் தருகிறார்கள். உடைந்த கண்ணாடி பாட்டிலை உருக்கி மீண்டும் பாட்டிலாக வார்க்க முடியும் என்றாலும் நடைமுறையில் அது சாத்தியமில்லை. இழந்த உரிமையைப் பெற சட்டமும், நாட்டு வழக்கும் மாற வேண்டும். கண்ணாடி உருகி அதன் முன் நிலையை அடைய வேண்டும் என்பதுபோல, உணர்ச்சி அதன் ஆரம்ப நிலையை அடைந்தால்தான் அதற்கெதிரான உருமாற்றம் அடைய முடியும்.**

- ☆ *இழந்ததைப் பெறலாம்.*
- ☆ *ஆதியில் ஆரம்பித்தால் இழந்ததைப் பெறலாம்.*
- ☆ *எதையும் செய்யலாம். இழந்த அனைத்தையும் மீண்டும் பெறலாம்.*
- ☆ *முந்தைய நிலை பலித்தால், பிந்தையது முடியும்.*

பரீட்சை பெயிலானால் மீண்டும் பாஸ் செய்யலாம். ஆனால் ஒரு வருஷம் போய்விடும். கிழிந்த துணியைத் தைக்கலாம். ஆனால் கிழிசல் மறையாது. கடலில் மூழ்கிய பொருள் கிடைக்காது. போன உயிர் வாராது. இழந்த பொருளை மீண்டும் அனைவராலும் பெற முடியாது. அன்னை சட்டம் வேறு.

அன்னை காலத்தைக் கடந்தவர். காலத்தைக் கடந்தும் அருளை நமக்கு அன்னை நம்பிக்கை மூலம் வழங்குகிறார். நம் நம்பிக்கை மூலம் நாம் காலத்தைக் கடக்க முடியும். அதன் மூலம் இழந்ததைப் பெற முடியும். அதற்கு வரையறையுண்டு என்றால், அது நம்பிக்கைக்குரிய வரையறையே தவிர அருளுக்குரியதன்று.



அன்பர்கள் வாழ்வில் நடந்தவற்றை யோசனை செய்து பார்த்தால், அவர்கள் நிலையில் முடியாதது என்பது முடியும் என்று பல நூறு நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. அவற்றை நாம் பலனாகப் பெற்றால், பலன் அத்துடன் முடிகிறது. பலன் மூலம் நாம் ஞானம் பெற முயன்றால், நமக்கு அந்த ஞானம் வரும். ஞானத்தின் அடிப்படையில் செயல்பட்டால், நடக்காதது நடக்கும். நமக்கு நடக்காதது முதலில் நடந்தால், முடிவில் எவருக்கும் நடக்காதது நடக்கும். அன்னை செய்தவற்றை நாம் அறிந்தால் அவை விளங்கும். நம்முடைய அதிகபட்ச நம்பிக்கை செயல்பட்டு காரியம் நடந்தால், உடைந்த கண்ணாடி பாட்டில் உயிர்பெறும்.

இதைச் செய்து முடிக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

- ✪ ***அன்னைக்கு இந்த சக்தி பரிபூரணமாக உண்டு என்று முழுமையாக நம்ப வேண்டும்.***
- ✪ ***இது நடக்காவிட்டால், அது நம் நம்பிக்கையின் குறைவு என மனம் ஏற்கவேண்டும்.***
- ✪ ***குறைவான நம்பிக்கையை நிறைவாக மாற்ற வேண்டும்.***
- ✪ ***மாறியபின் காரியம் பூர்த்தியாகும்.***
- ✪ ***பூர்த்தியாகாவிட்டால், நடைமுறையில் குறை இருக்கிறது எனப் பொருள்.***
- ✪ ***அதை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.***
- ✪ ***கண்டுபிடிக்க முடியாவிட்டால், அக்காரியத்தில் பூரண அனுபவம் உள்ளவர்களைக் கேட்டுத் தடையை, குறையைக் கண்டுபிடிக்க வேண்டும்.***
- ✪ ***கண்டுபிடித்த குறையை அகற்ற வேண்டும்.***
- ✪ ***அதன்பின் பிரார்த்தனையில்லாமல் பலிக்கும்.***

- ✪ ***பலிக்காவிட்டால், 3 நாள் பிரார்த்தனை தவறாது பலிக்கும்.***
- ✪ ***அது தவறியதாக இதுவரை சரித்திரம் இல்லை.***

வீட்டை விற்றுக் கடன் கொடுத்தவர், 10 ஆண்டுக்குப் பின் அன்னையின் இம்முறையை அறிந்து மீண்டும் வீடு வாங்கினார். எஸ்டேட்டை இழந்தவர், திரும்பப் பெற்றார். 17 வருஷம் கழித்து இழந்த வேலையை மீண்டும் ஒருவர் பெற்றார். 18 ஆண்டுகட்குப் பின் மகப்பேறு கிட்டியது. இழந்ததை மீண்டும் பெறலாம். நிச்சயம் பெறலாம். புதிய வாய்ப்பைப் பெறுவது சிரமம் என்றாலும், இழந்ததைப் பெறுவதைவிட, வாய்ப்பைப் பெறுவது எளிது. ஏனெனில் இழந்ததைப் பெற நாம் நம் பழைய நிலையை நேர் எதிராக மாற்றுதல் அவசியம். அது நமக்குச் சிரமம்.

களிமண்ணால் செய்யப்பட்ட குடத்தை சூளையிடுவதற்கு முன், பாத்திரமாக மாற்ற முடியும். குடம், மாறிய பாத்திரமாக மீண்டும் களிமண்ணாகி பாத்திரமாக உருப்பெற வேண்டும். முடியும் என்றால், அதன் ஆரம்ப நிலையை எய்தினால்தான் மாற்றம் முடியும். எனது சொத்தை நான் இழந்துவிட்டேன் என்றால் பொதுவாக உலகில் அதை மீண்டும் பெறும் வழியில்லை. வழி என்று ஒன்றிருந்தாலும், அது ஆயிரத்தில் ஒருவர்க்குப் பல ஆண்டுகட்குப் பின் பலிக்கும். அன்னையிடம் அவர் முறையை ஏற்றுக் கொள்பவர் அனைவருக்கும் பலிக்கும். எவ்வளவு நாளாகும் என்பது கேள்வியில்லை. மனம் மாறினால், பலன் உண்டு. மாறியவுடன் பலன் வரும்.

சொத்தை இழந்தவர் அறிவில்லாமல் அல்லது பொறுப்பு இல்லாமல், ஊதாரித்தனமாகவோ, வேறு வகையிலோ இழந்திருப்பார். பொறுப்பில்லாமல் இழந்தவரை எடுத்துக் கொள்வோம். சொத்து பொறுப்புக்கு சேருவது. பொறுப்பின்மை சொத்தை இழக்கும். பொறுப்பின்மையால் சொத்தை இழந்தவர்,



தன் பொறுப்பின்மையைப் பொறுப்பாக மாற்றிக் கொண்டால், மீண்டும் அந்தச் சொத்து வரும். இதை ஏற்பவர்கள் குறைவு. ஏற்றால், நம்புபவர்கள் குறைவு. இழந்தவர் மனம் திறந்து பேசினால், தான் பொறுப்பற்று நடந்ததை அறிந்து அவர் மனம் அதை ஏற்றுக்கொண்டால், இனி மனதால் பொறுப்புடன் நடப்பதாக ஏற்றுக்கொண்டு, அதைச் செயல்படுத்த முன்வர வேண்டும். இதற்குப் பொறுப்பின்மை என்ற குணம் தன்னையறிந்து, பொறுப்பின்மையை இழந்து, ஆரம்ப நிலைக்குப் போய், மீண்டும் பொறுப்புள்ள குணமாக மாற வேண்டும். அதெல்லாம் என்னால் முடியாது என்பவருக்கு நாம் உதவ முடியாது. இன்று மனம் மாறி, பொறுப்பேற்பட்டு, சிறு காரியங்களில் பொறுப்போடு நடந்து, பெரிய விஷயங்களில் பொறுப்பு ஏற்பட்டு, இழந்த சொத்தை பெறும் அளவுக்குப் பொறுப்பு வரும் நேரம் சொத்து தேடி வரும்.

நாமறிந்த மனித வாழ்க்கையில் இதுபோல் மனம் மாறினால் வீட்டிலுள்ளவர்கள் போற்றுவார்கள். இதுபோலிருந்தால் சொத்து போயிருக்காது என்பார்கள். அதனால் அவர் மனநிம்மதி பெறலாம். இழந்த சொத்து மீண்டும் வாராது. வருவதற்கு வாழ்க்கையில் முறைகளில்லை. வரவேண்டுமானால், மீண்டும் சம்பாதிக்க முயன்றால், பலிக்கும். எப்பொழுது பலிக்கும் என்பது அவர் கையில் இல்லை. அன்னையை ஏற்றுக்கொண்ட வாழ்வில்,

செயல் மன உணர்வால் ஏற்படுகிறது என்பது சட்டம்.
மனம் மாறிய நேரம், சூழ்நிலை மாறும்.
சூழ்நிலை மாறினால், இழந்தது வரும்.
அனைவரும் இம்முறையால் இழந்ததைப் பெறுவர்.
முயற்சியுடையவர் இழந்ததைவிட அதிகமாகப் பெறுவார்கள்.

இந்தச் சட்டம் உரிமை, உடைமை, அந்தஸ்து, பதவி, செல்வாக்கு, பணம், அனைத்திற்கும் பொது.

*வாழ்வில் மனம் மாறுவது நல்லது, ஆனால் அரிது.*
*மனம் மாறினால், குணம் மாறும், இழந்தது வாராது.*
*அன்னையிடம், மனம் மாறினால், இழந்தது வரும்.*

❋ ❋ ❋

**717) சர்வ ஆரம்பப் பரித்தியாகி எனில் எவ்வளவு சிறியதானாலும், அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது. (உ.ம்.) ஓர் அபிப்பிராயத்தைச் சொல்வது, நோக்கத்தை வெளியிடுவது, சௌகரியத்திற்காக ஒரு பழக்கப்பட்ட காரியத்தைச் செய்வதும் அது போலாகும். அடக்க முடியாத ஆசையை அடக்க முயல்வது ஆரம்பமாகும்.**

*சர்வ ஆரம்பத்தையும் பரித்தியாகம் செய்ய பிழையற்ற பூரணம் தேவை.*

சர்வ ஆரம்பப் பரித்தியாகி.

பூரணயோகத்தின் அடிப்படைகள் பல்வகையானவை. அவை,

- **சரணாகதி**
- **திருவுருமாற்றம்**
- **சர்வாரம்பப் பரித்தியாகி**
- **சமர்ப்பணம்**

இதன் யோக ரகஸ்யம் உண்டா? அது என்ன? எப்படி இது யோக ரகஸ்யமாயிற்று? நடைமுறைக்குப் பயன்படும் முறையாக எடுத்துக்கொள்ளலாமா?

நாம் வாழ்கிறோம். அதாவது உயிரோடிருக்கிறோம். இடையறாது செயல்படுகிறோம். தண்ணீர் குடிப்பதுபோன்ற சிறு காரியங்களிலிருந்து வெளிநாடு போவது, எலக்ஷனில் நிற்பது



போன்ற பெரிய காரியங்கள் வரை ஆயிரமாயிரம் செயல்களைச் செய்கிறோம். இச்செயல்கள் உடலாலும், உணர்வாலும், மனத்தாலும் நடைபெறுகின்றன. அறிவு போடும் உத்தரவை கை செயல்படுத்துகிறது. அதற்குத் தேவையான சக்தியை (energy) உணர்வு தருகிறது. இதுவே ஆன்மீகச் சட்டம். விஞ்ஞானச் சட்டமும் இதுவேயாகும். இப்படிச் செய்ய வேண்டிய காரியங்களை நம்முள் நாம் ஆரம்பிப்பதைக் காணலாம்.

- ''ஏதாவது படித்தால் தேவலை போன்றிருந்தது. இதயம் படித்தேன்''.
- ''என் மாமன் என் அண்ணனை குறை கூறிப் பேசினார். எனக்குத் தாங்கவில்லை. பதில் சொல்லாமலிருக்க முடியவில்லை. சொல்லிவிட்டேன்''.
- ''மாம்பழம் 2 சாப்பிட்டேன். 3வது பழத்தையும் சாப்பிடத் தோன்றியது, சாப்பிட்டேன்''.

இதுபோல் நாம் செயல்படும்பொழுது அச்செயலை நாம் நம்முள்ளே ஆரம்பிக்கின்றோம். ஆசையாலோ, தேவையாலோ, அவசியத்தாலோ நாம் இதுபோன்று காரியங்களை ஆரம்பிப்பதை தியாகம் செய்ய வேண்டும். சர்வ காரியங்களையும் அதுபோல் தியாகம் செய்பவர் சர்வாரம்பப் பரித்தியாகி ஆவார்.

இதுபோன்ற ஆரம்பம் இல்லாவிட்டால், வாழ்வேயில்லை. ஆனால் யோகத்திற்கு இது அவசியம்.

நடைமுறை: நமக்குப் பிரச்சினைகளைத் தீர்க்க இதை - சர்வாரம்பப் பரித்தியாகம் - ஒரு முறையாகப் பயன்படுத்தலாம். வீட்டில் fuse போய்விட்டது. இரண்டு நாளாக EB ஆட்கள் வரவில்லை. நாம் போய் அழைத்து வாராவிட்டால் எத்தனை நாளானாலும் அப்படியேயிருக்கும். அவர்களாக 5 நாள் கழித்து

வந்தால் அதுவரை நமக்குத் தாங்குமா?

நம் கடமை complaint தர வேண்டியது. போய் அழைத்து வர வேண்டியது. அன்னையை நினைத்து அவற்றைச் செய்தால் வேலை முடியும். போய்க் கூப்பிட்டால், வருவதாகச் சொல்கிறார்கள், வரமாட்டேன் என்கின்றனர் எனில், நம் கடமை பூர்த்தியாகிவிட்டது. மேற்கொண்டு அன்னையிடம் சொல்லிவிட்டு, மனதால் ஆரம்பிக்கக் கூடாது என்று முடிவு செய்தால், முடிவை நிறைவேற்றினால், EB ஆட்கள் அதே நேரம் தவறாது வருவார்கள்.

நாமாக ஒரு காரியத்தைச் செய்யப் பிரியப்பட்டு ஆரம்பிப்பதை 'ஆரம்பம்' என்கிறார். ஒரு காரியம் செய்யத் தோன்றினால், தோன்றும் எண்ணத்தை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்து, சமர்ப்பணத்திற்கு என்ன உத்தரவு வருகிறது எனக் காத்திருந்து, அதன்படி நடப்பது ஆரம்பத்தைத் தியாகம் செய்வதாகும். எல்லாக் காரியங்களையும் அதுபோல் செய்பவன் சர்வ ஆரம்ப பரித்தியாகி ஆகும்.

இதைச் செய்ய முன்வருபவர்கள் மிகவும் குறைவு. முன் வருபவர்களுக்குச் சற்று நேரத்திற்குள் இந்த எண்ணம் மறந்துவிடும். அடுத்த முறை நினைவு வருவது சில நாளாகும். சில சமயம் பல மாதமாகும். அப்பொழுது மீண்டும் முனைந்தாலும் ஓரிரு முயற்சிகளில் இது மீண்டும் மறந்துபோகும். மறந்துபோகவில்லை எனில், இது முடியவில்லை என்று தெரியவரும். மூச்சை இரண்டு மணி நேரம் அடக்க எடுக்கும் முயற்சி சில நிமிஷத்தில் முடிவது போல், ஆரம்பத்தைத் தியாகம் செய்யும் முயற்சியும் உடனே முடிவடைந்துவிடும். மூச்சை நெடுநேரம் அடக்குவது யோகப் பயிற்சி. அதைப் பெற நெடுநாளாகும். பெற்று முயன்றால், முடியும். அதே போல் கரணங்கள் தூய்மைப்பட்டு, மன அலைச்சல் அழிந்து, மன



எழுச்சியடங்கி, உணர்வு நேர்ப்பட்டு, சுயகட்டுப்பாட்டில் வந்து, உடலின் படபடப்பு அடங்கி, சாந்தி பெற்று, ஜீவன் சமர்ப்பணத்தை ஏற்க வேண்டும். சமர்ப்பணத்தை ஏற்றால், ஆரம்பத்தில் வாய்ச் சொல்லால் சமர்ப்பணம் செய்கிறோம். அதாவது வாயால், 'இக்காரியத்தை நான் சமர்ப்பணம் செய்கிறேன்' என்கிறோம். அதற்கிசைய காரியத்தின் போக்கு மாறுகிறது. வாயால் சொல்வது மறக்காமல் தொடர்ந்தால், மனதால் அதையே சொல்லலாம். அதற்குப் பலன் அதிகம். அது தவறாது தொடர்ந்த நிலையில், மனதில் எழும் எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்தால், எண்ணம் எழுந்தது தணிந்து, அடங்குவது தெரியும். மனம் அமைதியுறும். காரியம் பெருமாறுதலடையும்.

அதை இடையறாது செய்பவர்கள் உணர்ச்சியைச் சமர்ப்பணம் செய்தால், உடலில் பேரளவு சக்தி நிறைவதைக் காணலாம். அது முழுமை பெற்றபின் உடல் அசைவுகளை அதேபோல் சமர்ப்பணம் செய்து, பலித்து, நிரந்தரமானால், ஆரம்பத்தைத் தியானம் செய்ய முன்வரலாம். இனி ஆரம்பத்தைத் தியாகம் செய்வது பலிக்கும் வாய்ப்புண்டு.

நம் அபிப்பிராயம் மனதில் எழுந்தால், சொல்லாமலிருக்க முயலும்பொழுது இதன் கரு விளங்கும். ஒரு நோக்கம் (attitude) எழுந்தாலும், மறுப்பது கடினம். போன் பேசும்பொழுது வலக்கையில் ரிசீவரை வைப்பது பழக்கமானால், அப்பழக்கம் தன்னை வலியுறுத்தும். அதை மாற்ற முயன்றால் எரிச்சல் வரும். போனில் பேசவே பிடிக்காது. பழக்கத்தை மாற்ற முடிய வேண்டும். அது மிகவும் கடினம். அபிப்பிராயம், நோக்கம், பழக்கம் ஆகியவற்றை தியாகம் செய்த பின்தான் ஆரம்பத்தைத் தியாகம் செய்ய முடியும்.

❋ ❋ ❋

**718) பிறருக்கு உபதேசம் செய்தபின் ஒவ்வொரு முறையும், அது நமக்கே எந்த அளவுக்குப் பயன்படும் என்று கருதுவது நல்லது. இதைப் பின்பற்றினால் அளவுகடந்து முன்னேறலாம்.**

*தனக்குத் தேவையானதைப் பிறருக்கு உபதேசம் செய்கிறோம்.*

முன்னேறலாம் என்றால் என்ன? அது எப்படி அளவு கடந்து போகும்? மனிதன் தன் வாழ்வை (survival) போதுமென்ற அளவில் அமைத்துக்கொள்கிறான். பிழைக்க வழி தெரிய வேண்டும் என்பது வழக்கு. அதாவது தேவைகள் - உணவு, உடை, இருப்பிடம் - பூர்த்தியாகும் அளவுக்கே அவன் முயற்சி இருக்கும். அதற்கு மேல் பொதுவாக முயல்வதில்லை. முயல்பவனைப் பேராசைக்காரன் என்பார்கள். நாலு பேர் மதிக்கத்தக்க அளவு முனைபவர் பலர். இவர்கள் சிறுபான்மையோர். இவர்களும் அந்நிலையை எட்டியவுடன் முயற்சியை நிறுத்திவிடுவார்கள்.

ஒருவனால் பெறக்கூடியதை முயன்று பெறுவது முன்னேற்றம். அது அவன் இன்று பெற்றுள்ளதைப்போல் 10 மடங்கிருக்கும். மரத்தடியில் நின்று பறிக்க முடியும் அளவு பிழைக்கத் தேவையானது போலவும், மரத்தின் மீதேறி பறித்துண்பது முன்னேற்றம் போலவும் கருதலாம். ஆசை தீரச் சாப்பிட முடியும். அளவுகடந்த முன்னேற்றம் என்பது அடுத்த கட்டம். மரத்தில் ஏறி தன்னால் முடிந்த அளவு பறிப்பது, பறித்ததை விற்றுப் பலனடைவது போன்றது அளவுகடந்த முன்னேற்றம். அதற்களவில்லை. நாம் ஏற்படுத்துவதே அளவு.

அனைவராலும் பிறருக்கு உபதேசம் செய்ய முடியாது. உபதேசம் செய்ய அனுபவம், அறிவு தேவை. அறிவு மனத்திற்கு உரியது. அனுபவம் உணர்ச்சிக்குரியது. அறிவு உடலையடைந்தால் அனுபவம் முதிர்ந்து பலனாகும்.



ஸ்ரீ அரவிந்தர் Thoughts & Aphorisms 'சிந்தனை மணிகள்' என்ற தலைப்பில் 500 கருத்துகள் எழுதியுள்ளார். தாம் பெற்ற கிருத்துவப் பயிற்சியைத் தம்மிடமிருந்து விலக்க அவர் செய்த முயற்சி அது என்று அன்னை கூறுகிறார்.

நினைவு, பேச்சு, எழுத்து, உபதேசம் ஆகியவற்றிற்கு ஒரு காரணம் உண்டு. நமக்கு முழுவதும் புரியாததை நாம் நினைக்கிறோம், பேசுகிறோம், எழுதுகிறோம், உபதேசிக்கிறோம் என்றொரு கருத்துண்டு. மகாபுருஷர்கள் போக மற்றவர்க்கு இந்தச் சட்டம் உண்மை. மகாபுருஷர்கட்கும் ஆரம்பக் காலத்தில் இது உண்மையாகும்.

அறிவு மனதில் தெளிவுபடாத நேரம் அது நினைவிலெழும். அறிவு ஏற்றுக்கொண்டதை உணர்வு ஏற்க பேச்சு உதவும். உணர்வு ஏற்றதை உடல் ஏற்க - அதாவது பூரணப் பலன் பெற - எழுத்து உதவும். பிறருக்கு நாம் உபதேசம் செய்வதை, நாம் முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கமாட்டோம். அதனால் உபதேசம் முடிந்தபின், நாம் அதை எந்த அளவு பின்பற்றுகிறோம் என நினைத்துப் பார்த்தால், உண்மையில் நாம் சொல்லியதைப் பாதி அளவுக்கே பின்பற்றுகிறோம் என அறிவோம்.

நாம் வாழ்வில் முதல் அளவில் பல விஷயங்களிலிருக்கிறோம். முதல் வகுப்பில் பாஸ் செய்யும் மாணவன் மூன்றாம் வகுப்பில் பாஸ் செய்வதைப் போலிருக்கிறோம். முன்னேற்றத்தை விழைய நாம் சிந்திக்க வேண்டும்.

பிறருக்கு நாம் சொல்வதை முழுமையாக நம் வாழ்வில் பின்பற்ற முயன்றால், தெளிவுடன் முன்னேற்றமும் ஏற்படும்.

அதையே ஒரு முறையாகப் பின்பற்றினால், முன்னேற்றத்திற்கு முடிவில்லை.

**அளவுகடந்த முன்னேற்றம் அனுதினமும் அமையும்.**

பெற்றோர், ஆசிரியர், முதலாளி, தலைவர் போன்றவர்கட்கு பிறருக்கு உபதேசம் செய்யும் கடமையுண்டு. கடமைக்குட்பட்டு கூறும் அறிவுரை சரியானது. அது மேற்சொன்ன தலைப்பின் கீழ் வாராது. அதுபோக தேவையில்லாமல் உபதேசம் செய்பவருண்டு. தேவையுள்ளபொழுது, அதை ஒரு சந்தர்ப்பமாக ஏற்று அதிகமாக உபதேசம் செய்பவர்கள் ஏராளம். அப்படிப்பட்டவருக்கே மேற்சொன்னது பொருந்தும்.

**அடிப்படை உண்மை**

தனக்குப் பிடிக்காதது, முடியாதது, தனக்கு நம்பிக்கை இல்லாதது ஆகியவற்றையே மனிதன் பிறருக்கு உபதேசம் செய்கிறான். தனக்கு முடியும் என்றபின் உபதேசம் செய்வதை நிறுத்திவிடுவான்.

பிறருக்கு உபதேசம் செய்கிறார் எனில், அவருக்கே நம்பிக்கை இல்லை எனப் பொருள்.

நம்பிக்கையில்லாதபொழுதுதான் உபதேசம் செய்வார்கள்.

இது அடிப்படை உண்மையானால், விதிவிலக்கு, மாற்றம், திருத்தம் உண்டல்லவா? ஓரளவில் விலக்கு, மாற்றம், திருத்தம் உண்டு. வேறொரு பெரிய அளவில் ஸ்ரீ அரவிந்தர் எழுதிய Aphorisms சிந்தனை மணிகளையும் அன்னை இந்தச் சட்டத்திற்குட்படுத்தி, பகவான் தாம் பெற்ற கிருஸ்துவப் பயிற்சியிலிருந்து விடுபடவே இவற்றை எழுதினார் என்கிறார். மேதை (genius), சிருஷ்டிக்கர்த்தாக்கள் (creative writers)



போன்றவர்கள் எந்த அளவுக்கு இந்தச் சட்டத்திற்குட்படுவார்கள் என்று விவாதிக்காமல், நம்மைப் போன்றவர்களை மட்டும் கருதுவதற்காகவே மேற்கூறியதை எழுதினேன்.

நாம் பிறரை விமர்சிப்பதற்குப் பதிலாக, ஒருவரிடம் இதுபோல் ½ மணி பேசிய பின், அவர் போனபின், நாம் என்ன பேசினோம் என்று நினைத்துப் பார்த்தால்,

- ✪ பிறர் பேசும்பொழுது குறுக்கிட்டுப் பேசக்கூடாது.
- ✪ வேலையைத் தாமதிக்காமல் செய்ய வேண்டும்.
- ✪ கடன் வாங்குவது தவறு என்ற 3 கருத்துகளை வலியுறுத்தி விளக்கமாகப் பேசியவர் கண்டார். கேட்டுக் கொண்டவர், ‘‘மிகப்பயனுள்ள கருத்து. எனக்கு நேரடியாகப் பயன் தரும்’’ என்று கூறிப் போனார் எனில், அதை அடுத்துப் பேசியவர் தம் வாழ்வை நினைவுகூர்ந்தால்,
- ✪ குறுக்கிடாமல் அவராலிருக்க முடியாது.
- ✪ எந்தக் காரியமும் நேரத்தில் செய்ததில்லை.
- ✪ ஏராளமான கடன் பாக்கியுள்ளது எனத் தெரியும். இது ஒரு absolute truth, சாதாரணமானவர்கள் வாழ்வில் விலக்கில்லாத சட்டம் என்பதை நாம் அன்றாடம் காணலாம்.

தம்மை ஒருவர் அறிய வேண்டுமானால், இதுவரை யார், யாருக்கு என்ன என்ன உபதேசம் செய்தோம் என நினைத்துப் பார்த்தால், அவருக்கு அவருடைய எல்லாக் குறைகளும் தெரிய வரும். தாமே அவ்வுபதேசங்களைப் பின்பற்றினால் அவர் வாழ்வு பெரிய அளவு முன்னேறும்.

❋ ❋ ❋

**719) வாய்விட்டுப் பேசினால் புரியக்கூடியதுண்டு. மௌனமாகப் படிப்பதால் புரியக்கூடிய உயர்ந்த கருத்துண்டு. முனிவர் மனம் எண்ணத்தின் உதவியின்றி அறியும். ரிஷியின் மனம் காட்சியாகவே காணும். புரிவதென்பதே அங்கில்லை. யோகிக்கு ஜோதியும் தேவையில்லை, தானே புரியும். சத்திய ஜீவியத்திற்கு ஞானமே தேவையில்லை.**

*வாய்விட்டுப் படித்தும், மௌனம் காத்தும், சிருஷ்டியில் பார்க்கும் ஞானம் சத்தியஜீவியத்திற்குத் தேவையில்லை.*

நாம் படித்தது புரியவில்லை எனில், உரக்கப் படித்துப் பார்ப்பதுண்டு. அப்பொழுது புரியும். நாம் சொல்லியது புரியவில்லை என்றால், புரியாதவர்க்குப் புரிய குரலை உயர்த்திப் பேசுவதுண்டு.

நமக்கே புரியாத நேரம் நம் குரல் உயர்வது வழக்கம்.

வாய்விட்டுப் படித்தால் 10 பக்கம் படிக்க முடியுமானால், மௌனமாகப் படித்தால் அதிகமாகப் படிக்கலாம். அதிக அளவும் புரியும். கருத்து உயர்ந்ததானால், சத்தம் போட்டுப் படித்தால் புரியாது. மௌனமாகப் படித்தால் விளங்கும். இவை நம்மைப் போன்ற மனிதர்கட்கு.

முனிவர்கள் உயர்ந்த ஞானத்தை அறிபவர்கள். அவர்களுக்கு சொல் குறுக்கே வந்தால், அது தடையாகும். சொல் எழுந்தால் தடை. அழிந்தால் தடை விலகும். முனிவர் மனம் மௌனமானது. அதனால் உயர்ந்ததை அறியும். உயர்ந்ததை அறிய சொல் தடையாகும்.

ரிஷியின் நிலை அதையும்விட உயர்ந்ததால் அவருக்கு ‘புரிவது’ என்பதே understanding தடையாகும். எனவே அவர் தமக்குரிய ஞானத்தைக் காட்சியாக, திருஷ்டியாக, நேரடியாகக் காண்கிறார்.



வாய்விட்டுப் படிப்பவனுக்குக் கருவி சப்தம். மௌனமாகப் படிப்பவனுக்குக் கருவி சொல். சொல்லில்லாமல் புரிந்துகொள்ளும் முனிவரின் கருவி comprehension புரிந்துகொள்ளும் திறன், புத்தி எனப்படும். ரிஷியின் கருவி ஒளி, ஜோதியாகும். யோகிக்கு ஒளியும் தேவையில்லை. ஒளியும் தடையாகும். ஞானத்தை நேரடியாகப் பெறுகிறார் அவர். அதை intuition, நேரடி ஞானம், சகஜ ஞானம் என்கிறார்கள்.

தெய்வநிலை அடுத்தது. அவர்கள் ஞானத்தையுடையவர்கள். ஞானத்தைப் பெறவேண்டிய அவசியமில்லை. தெய்வஞானம், அஞ்ஞானத்துடன் கலந்த நிலையிலுள்ளது. சத்தியஜீவனில் - அன்னை, ஸ்ரீ அரவிந்தர் இதன் அவதாரமாவார்கள் - ஞானம் அஞ்ஞானக் கலப்பில்லாமல் அமைந்துள்ளது. அதனால் ஞானத்தைப் பெறும் அவசியமோ, ஞானத்தை அஞ்ஞானத்திலிருந்து பிரிக்கும் தேவையோ சத்தியஜீவியத்திற்கில்லை.

இதற்கடுத்த நிலை சித்தம் - சத்து, சித்து, ஆனந்தம் எனப்படும் சச்சிதானந்தத்திலுள்ள இரண்டாம் கட்டமான சித்தம் - ஜீவியமானது. ஜீவியம் ஞானத்தின் பிறப்பிடமாகும். ‘அறிவால் பெற முடியாததை, ஞானத்தால் பெற முடியாததை, ஜீவியத்தால் பெறலாம்’ என பகவான் பகுத்தறிவுவாதிக்குச் சொல்லி, அறிவே முடிவானதில்லை என அறிவுறுத்துகிறார்.

புரியாதவற்றைப் புரிந்துகொள்ள நாம் சில சமயங்களில் வாய்விட்டுப் படிப்பதுண்டு. வாய்விட்டுப் படிப்பதால், புரியாதது புரியும். அது ஒரு நிலை. மௌனமாகப் படிப்பதால் வேகமாகப் படிக்கலாம். அத்துடன் வாய்விட்டுப் படித்தால் புரியாதது, மௌனமாகப் படிக்கும்பொழுது புரியும். இது அடுத்த நிலை.

சில சமயம் பிரச்சினை வந்து நம்மை ஆட்டிப்படைக்கும் பொழுது ஒன்றுமே செய்ய முடிவதில்லை. யோசனை செய்ய

முடியாத அளவு குழப்பம் பயங்கரமாக வளரும். அது போன்ற சமயம் நாம் வேறிடம் போய், வேறு வேலையில் ஈடுபட்டு, பிரச்சினை இயல்பாக மறந்துள்ளபொழுது திடீரெனத் தோன்றும் யோசனை எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கும்.

இதை நாம் மௌனமான சிந்தனை என்கிறோம்.

எண்ணம் தெளிவு பெறாதபொழுது, எண்ணமற்ற நிலை தெளிவு தரும். இதுவே மௌனத்திற்குரிய முனிவர் மனமாகும். இதைவிட உயர்ந்த நிலையும் உண்டு. அவை முந்நிலையைவிட கடுமையான பெரிய பிரச்சினைகளைத் தீர்க்கவல்லது. அதற்கு மௌனத்தைக் கடந்து செல்ல வேண்டும். அந்நிலை ரிஷியின் நிலை எனலாம், மனிதனுக்குரியதன்று. ஆனால் மனிதனுக்கும், அன்னை மீது பக்தி மேலிட்ட நிலையில் ஒரு நிமிஷம் தோன்றும். ஆயிரம் அன்பர்கள் அதை அனுபவித்துள்ளனர். பிரச்சினை எப்படித் தீரும் என்பது மௌனமான மனம், மௌனத்தைக் கடந்த நேரம் காட்சியாகத் தோன்றும். யார் பிரச்சினையைத் தீர்க்க முடியுமோ அவர் காட்சியில் தெரிவார். ஓர் அன்பருக்கு அன்னை காட்சியளித்தார், பிரச்சினை தீர்ந்தது.

அடுத்தது யோகியின் நிலை. பிரச்சினையின் தீர்வு யோசனையோ, மௌனமோ, காட்சியோவன்று, நேரடியாக வெளிப்படும் (intuition). இதற்கடுத்தது தெய்வநிலை. அதற்குரியது ஞானம். அஞ்ஞானக் கலப்பற்ற ஞானம் எழுந்து, நமக்கு விபரம் தெரியும். முடிவான நிலை சத்தியஜீவியம். சத்தியஜீவியம் ஞானமயமானதால், அங்கு ஞானமும் தேவை இல்லை. ஏனெனில் அங்குத் தீர்க்க வேண்டிய பிரச்சினை ஒன்றில்லை.

**நடைமுறை:** மேற்சொன்ன முறைகளை, பிரச்சினைகளைத் தீர்க்கவும், வாய்ப்பை அனுபவிக்கவும் பயன்படுத்தலாம்.



அன்பர்கட்கு இவையெல்லாம் பல சமயங்களில் நடப்பதுண்டு. என்ன நடந்தது என்று தெரியாமல், நாம் பலனை மட்டும் அனுபவிப்பதால், இவற்றின் தத்துவக் கருவை அறிவதில்லை. புதிய மருந்து குணப்படுத்துகிறது என்று காண்கிறோம். எப்படி என அறிய முயல்வதில்லை.

***அறிய முயன்று பெறும் தெளிவு ஞானமாகும்.***

❋ ❋ ❋

**720) ஸ்ரீ அரவிந்தர் எழுதியவை சத்தியஜீவிய ஞானத்தை தருகின்றன. அதைப் பெற மனம் சிந்தனையை நிறுத்த வேண்டும். காட்சிகளைக் காணும் திறனை இழக்க வேண்டும். எண்ணம், காட்சி உதவியின்றி நேரடியாக ஞானத்தைப் பெற முடியவேண்டும். அகத்திலுள்ளதே புறத்திலிருந்து வருகிறது எனத் தெரியும் நேரம், அந்த ஞானம் பூர்த்தி பெறுகிறது.**

***புறத்தை அகத்தில் காண்பவருக்கு ஸ்ரீ அரவிந்தம் தன்னை வெளிப்படுத்தும்.***

பேச்சு, சிந்தனை, புத்தி, திருஷ்டி, ஞானம் ஆகியவை மனிதன் உயரும் வகை என்றோம். பிரம்மம் ஒன்றே என்பது தத்துவம். மனத்தால் அகத்தையும், புலன்களால் புறத்தையும் உணர்கிறோம். அகமும், புறமும் ஒன்றே. அகவுணர்வை subjective எனவும், புறவுணர்வை objective எனவும் ஆங்கிலத்தில் பிரிக்கிறார்கள். மனித அறிவுக்கு அகம், புறம் என்ற இரு பிரிவுகள் உண்டு. யோக ஞானத்திற்கு அகமே, புறம்; புறமே அகம். அகமும், புறமும் இணையும் காலத்தில் பொருள்கள் பிரம்மமாகக் காட்சியளிக்-கின்றன. பிரம்மத்தை உணர்வது பிரம்ம ஞானம். அதை திருஷ்டியாக - காட்சியாக - காண்பது பிரம்ம திருஷ்டி. அதை

அகத்தில் கண்டவன் பிரம்ம ரிஷி.

பேச்சு நின்றால் வாய்மூடி நிசப்தமாகிறோம். சிந்தனை நின்றால் மௌனமாகி முனிவராகலாம். விரதமாகப் பேச்சை நிறுத்தினால் மனத்தில் எண்ணம் ஓடிக்கொண்டிருக்கும். பேசும் குரலைத் தாழ்த்தி, அளவைக் குறைத்து, பேசுவதால் பயனில்லை என அறிந்து, பேசுவதால் காரியம் கெடுகிறது என உணர்ந்து, பேச்சு குறைந்தால், அதே அளவுக்கு எண்ணம் குறையும். இதுபோல் பேச்சைக் குறைப்பது கட்டாயப்படுத்தி விரதமாக, வலிய செய்வதில்லை. வலிய செய்தால் உள்ளே பேச்சு குறையும். அறிந்து, தெளிந்து, உணர்ந்து பேச்சு குறையும்பொழுது, பேச்சு உள்ளும், புறமும் குறையும். புற அனுபவத்தை அகவுணர்வு ஏற்று, அகவுணர்வை புறச் செயல் ஏற்று, முயற்சி பகுதியாக (partial) இல்லாமல், முழுமை பெறுகிறது.

பேச்சைக் குறைப்பதில் அனுஷ்டித்த முறையை - முழுமையான முறையை - சிந்தனைக்கும் பயன்படுத்தினால் மனத்தில் சேரும் மௌனம், எதிரேயுள்ள பொருளையும், அல்லது நபரையும் தொடும். அது மௌன சித்தி. அவர் எதிரே போனால் 'நம்மை மௌனம் சூழ்கிறது' என்கிறோம்.

திருஷ்டி பெற்றவர் இதே முறையை - making the object the subject - பின்பற்றித் தவமுயற்சியை முழுமை பெறச் செய்தால், அவரிடம் சென்றால் நம் மனதில் காட்சிகள் தோன்றும்.

(Intuition) நேரடி ஞானம் பெற்றவரின் முழுமை அவரிடம் வருபவருக்கு ஞானத்தின் சாயலை அளிக்கும்.

அடுத்தது தெய்வநிலை. முடிவானது சத்தியஜீவியம். தெய்வநிலையில் பெறும் முழுமை அஞ்ஞானத்திலிருந்து பிரிய உதவும். சத்தியஜீவியம் முழுமையானது. முழுமையின்றி பெற



முடியாதது. அதை நாம் பெற்றால், முழுமை பெறுவோம். நாம் அதை முழுமைப்படுத்தத் தேவையில்லை. அங்கு அகம் புறமாகவும், புறம் அகமாகவும், இரண்டும் பிரம்மமாகவும், புருஷனாகவும் விளங்கும். அடுத்தவர் இறைவனாகக் காட்சியளிப்பார்.

The Life Divineஐப் படிப்பவர்கள் புரியவில்லை என்கின்றனர். சில இடங்கள் புரிகின்றன, பல இடங்கள் புரியவில்லை என்கின்றனர். சாவித்ரியைப் படிப்பவர்கள், தனி வரி விளங்குகிறது, மொத்தமாகப் புரியவில்லை என்கின்றனர். இவர்கள் போன்றவர்கள் தவிர, புரிகிறது என்பவர்கள் பலர். அவர்கட்குப் படித்தது புரியும். அப்படிப் புரிவது என்ன? நூலின் கருத்து தெளிவாகப் புரிகிறது என்பவர்கள் இவர்கள். இந்நூல்கள் சத்தியஜீவிய ஞானத்தைக் கொடுக்கின்றன. அது புரிகிறதா எனில், புரிவது சத்தியஜீவிய ஞானமில்லை. நூலின் வாதம், விளக்கம், கருத்து, கருத்துக் கோர்வை புரிகிறது என்று பொருள். Argument, explanation, idea ஆகியவற்றை மனத்தால் புரிந்து கொள்ளலாம். Essence சாரம் மனத்திற்குரியதன்று. சத்திய ஜீவியத்திற்குரியது. பட்டப்படிப்பால் பெறும் அறிவு மனத்திற்குரியது. அந்த அறிவுக்கு இந்நூல்களுடைய ஞானம் புலப்படாது. கீதையை மனப்பாடம் செய்து தினமும் பாராயணம் செய்வது போன்றது இது. பாராயணம் செய்பவர்க்குக் கருத்து விளங்காததுபோல், கருத்தும் விளக்கமும் புரிபவர்க்குச் சாரம் விளங்காது.

சத்தியஜீவியத்தை எட்டியவர்க்குத்தான் இந்நூல்கள் புரியுமா எனில், இந்நூல்கள் புரிய அவ்வளவு பெரிய சித்தி அவசியமில்லை. பக்தியும், நம்பிக்கையும், ஆங்கில அறிவுமிருந்தால் இந்நூல்கள் புரியும்.

அன்னை சக்தி சத்தியஜீவிய சக்தி. அதைப் பெற நாம் சத்தியஜீவியத்தை எட்ட வேண்டிய அவசியமில்லை. அதுபோல்

இந்நூல்கள் புரிய சத்தியஜீவியத்தை எட்ட வேண்டும் என்பதில்லை.

Supramental Grace, Mother's Grace சத்தியஜீவிய அருள், அன்னை அருள் பெறுபவர் இந்நூல்களைப் பயிலலாம். கலைக்டரைப் பார்க்க, கலைக்டராக வேண்டும் என்பதில்லை. கலைக்டரை அனைவரும் பார்க்க முடியாது, பார்க்க ஒரு முறையுண்டு. அம்முறை, அதற்குரிய சந்தர்ப்பம் வந்தால், எவரும் கலைக்டரைப் பார்க்கலாம் என்பதுபோல், அன்பராக இருந்து, பக்தி, நம்பிக்கையுடன் இந்நூல்களைப் பயில ஒரு முறையுண்டு. அம்முறையை மேலே சொன்னேன்.

மனம், முனிவர் மனம், ரிஷியின் மனம், யோகியின் மனம், தெய்வ மனத்தைக் கடந்த சத்தியஜீவிய ஞானத்தைப் பெற அன்பர் இந்நிலைகளைக் கடக்க வேண்டும். கடக்கும் முறையையே மேலே கூறியுள்ளேன். சுருக்கமாகச் சொன்னால்,

**இந்நிலைகளைக் கடந்த அன்னை மீது மனதை இருத்தினால், அன்பர் இந்நிலைகளைக் கடந்து படிக்க முடியும். அப்படிப் படித்தால், படிப்பது புரியும். சத்தியஜீவிய ஞானம் பெற அன்னையை மனதில் இருத்த வேண்டும் என்பதே முறை.**

❋ ❋ ❋

தொடரும்....

**ஜீவிய மணி**

சைத்தியப்புருஷன் ஈஸ்வரனின் பகுதி.



# இம்மாதச் செய்தி

எதைச் செய்தாலும் மனிதன் அடியோடு மறக்கக் கூடியவன். எதைச் செய்தாலும் செயல் நம்மை மறக்காது.

**மனிதன் மறப்பான்,**
**காரியம் நினைவு வைத்திருக்கும்.**

***We forget, not the work.***
***The act does not forget at all.***

❋ ❋ ❋

# லைப் டிவைன்

கர்மயோகி

## X. Conscious Force

There is one argument against. Page No. 89
We say it is a conscious intelligent source. Para No.21
It is for this purposeful work.
It is a work of intelligence, selection, adaptation and seeking.
That element too is in Nature's operation.
We call that argument waste.
Ours is human intellect.
It is obviously limited.
Human mind is rational.
But its rationality is particular.
It is good enough for human ends.
It applied that rationality to the World-Force.
We see only part of Nature's purpose.
We call the rest waste.
We do so because the rest is not useful.
Our own human action is like that.
It is full of apparent waste.
It is right for the individual.



## 10. சித் - சக்தி

அதற்கெதிரான சொல் ஒன்றுண்டு.
அது அறிவுள்ள, தன்னையறிந்த ஊற்று என்கிறோம்.
ஒரு குறிக்கோளுக்காக வேலை செய்வது எனலாம்.
புத்திசாலித்தனம், தேர்ந்தெடுப்பது, மாற்றிக்கொள்வது,
தேடல் என்பது சேர்ந்த நிலையாகும்.
இயற்கையின் தொழிற்பாட்டில் அனைத்தும் காணப்படுகின்றன.
விரயம் என நாம் அதைக் கூறுகிறோம்.
நம் அறிவு மனித அறிவு.
அதற்கு அளவுண்டு என்பது தெளிவு.
மனித மனம் பகுத்தறியும்.
அதன் பகுத்துணரும் தன்மை குறிப்பானது.
அது மனித இலட்சியங்கட்குப் போதும்.
அதை உலகத்தின் செயலுக்கு உபயோகப்படுத்துகிறது.
நாம் இயற்கையின் நோக்கத்தில் ஒரு பகுதியையே காண்கிறோம்.
மற்றதை விரயம் என்கிறோம்.
மீதி பயன்படவில்லை என்பதால் அப்படிக் கூறுகிறோம்.
மனிதன் செய்யும் காரியங்கள் அத்தகையவை.
பார்வைக்கு ஏராளமான விரயம் தோன்றும்.
தனி மனிதனுக்கு அது சரி.

But it subserves the universal purpose.
We can detect that part of the intention.
Nature gets done enough.
In spite of the waste much gets done.
Perhaps because of the waste much is accomplished.
There is the other part we do not detect.
We may well trust Nature here too.

Let us consider the rest. Page No.89
Nature has her drive of set purpose. Para No.22
It is apparantly a blind tendency.
It appears to guide Nature.
This is the characteristic of Nature.
Eventually She comes to the target set.
She does so immediately.
The World-Force operates in the animal.
It does so in the plant.
In inanimate things too it operates.
Matter was the Alpha and Omega to the scientist.
They are reluctant to admit intelligence to Nature.
Nature's intelligence is the mother of intelligence.
It was an honest scruple.
But it is no more so.
Now it is an outworn paradox.
Scientists affirm the emergence of human intelligence.



உலகத்தின் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய உதவும்.
அக்கருத்தையும் நாம் கண்டுகொள்ள முடியும்.
இயற்கையின் காரியங்கள் முடிகின்றன.
விரயமிருந்தாலும், வேலை நடக்கிறது.
விரயமிருப்பதால் அதிகக் காரியம் முடிகிறது.
நாம் காணாத பகுதியுண்டு.
இங்கு இயற்கையை நாம் நம்பலாம்.

மீதியை ஆராய்வோம்.
இயற்கைக்கு ஏற்பட்ட இலக்குண்டு.
பார்வைக்கு அது குருட்டு நோக்கமாகத் தோன்றும்.
அது இயற்கையை நடத்திச் செல்வதாகத் தெரிகிறது.
இது இயற்கையின் சுயமான இயல்பு.
எப்படி இலக்கை எட்டுகிறது?
உடனேயும் எட்டுகிறது.
உலக சக்திகளை நாம் விலங்கில் காண்கிறோம்.
தாவரத்திலும் அது உண்டு.
ஜடத்திலும் அது செயல்படுகிறது.
விஞ்ஞானிக்கு ஜடமே ஆதியும் அந்தமும்.
இயற்கைக்குப் புத்தியுண்டு என நம்மால் ஏற்க முடியவில்லை.
இயற்கையின் புத்தி, புத்தியின் உற்பத்தி ஸ்தானம்.
இத்தயக்கம் நியாயமானதே.
இனி அப்படியில்லை.
இனி அது நைந்த பழங்கதை.
மனிதனின் புத்தி எழுவதை விஞ்ஞானி வலியுறுத்துகிறான்.

They say it emerges out of unconsciousness.
They do so for mastery and consciousness.
They look to blind driving unconsciousness as source.
No form ever existed in unconsciousness.
No substance ever existed in Nature previously.
Man's consciousness is a form of Nature's consciousness.
It is there below mind.
It emerges in Mind.
It shall ascend beyond mind.
The Force that builds the world is a conscious Force.
Existence manifests itself in it.
It is a conscious Being.
Emergence in form is the sole object.
The potentials must have a perfect emergence.
We can rationally conceive it.
The potentials thus manifest in this world.
This is a world of Forms.

*The end.*

❋ ❋ ❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

நாலு பேர் எதிரில் உணர்வு தன் உண்மை நிலையை அறிவது, வெட்கம் எனப்படும்.



**அது ஜடத்திலிருந்து எழுவதாக விஞ்ஞானி விளக்கம் தருகிறார்.**
**ஜீவியத்திற்காகவும், வெற்றி பெறவும் அவர்கள் அதைச் செய்கிறார்கள்.**
**குருட்டுத்தனமான ஜடமே ஆரம்பம் என்கின்றனர்.**
**ஜடத்தில் ரூபமில்லை.**
**இயற்கையில் இதற்கு முன் விஷயமில்லை.**
**மனித ஜீவியம் இயற்கையின் ஜீவிய ரூபம்.**
**மனத்திற்குக் கீழும் உள்ளது.**
**மனத்திலிருந்து உற்பத்தியாகிறது.**
**மனத்திற்கு மேலேயும் போகிறது.**
**உலகை சிருஷ்டிக்கும் சித்-சக்தி.**
**சத் புருஷன் அதனுள் வெளிப்படுகிறான்.**
**அது தன்னையறிந்த புருஷன்.**
**ரூபமாக வெளிவருவதே நோக்கம்.**
**உள்ளேயுள்ளது சிறப்பாக வெளி வரவேண்டும்.**
**நம் பகுத்தறிவுக்கு அது புரியும்.**
**உள்ளேயுள்ள வித்து உலகில் வெளிப்பட வேண்டும்.**
**இது ரூபங்களாலான நோக்கம்.**

*முற்றும்.*

❋ ❋ ❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

விட்டுக் கொடுப்பது, சுமுகம், பூரணம், திருவுருமாற்றம் ஆகியவை அடுத்தடுத்த நிலைகளில் வற்புறுத்தல் குறைந்து சுதந்திரம் எழுகிறது.

முடிவான சுதந்திரத்தில் முடிவான சித்தி கிடைக்கும்.

## அதிர்ஷ்டம் வரும் தருணம்

தனி மனிதனுக்கு வரும் அதிர்ஷ்டத்தை நாம் அறிவோம். வியாபாரத்திற்கும், விவசாயத்திற்கும், கல்விக்கும், வீட்டுமனைக்கும் அதிர்ஷ்டம் வரும்.

வாலஸ் என்ற 17 வயது வாலிபருக்கு எந்த வேலையும் நிலையாக இல்லை. நாடு பொருளாதார நெருக்கடியில் மாட்டிக் கொண்ட நேரம். தாம் படித்த பத்திரிகைகளில் வரும் கட்டுரைகளைச் சுருக்கி கையிலுள்ள டைரியில் எழுதுவது வாலஸ் பழக்கம். தூங்குமுன் இதை மீண்டும் நினைவுபடுத்தலும் உண்டு. வேலையில்லாத நேரம் அவற்றைப் படிப்பதுண்டு. வேலை போய்விட்டது. தாம் கொஞ்ச நாளாகச் செய்து கொண்டிருந்த வேலையை - பத்திரிகைகளைச் சுருக்கி எழுதும் பழக்கத்தை - ஒரு readers serviceஆகச் செய்ய வாலஸ் பிரியப்பட்டார். பல பத்திரிகைக் கட்டுரைகளைச் சுருக்கி பாக்கட் சைஸ் புத்தகமாக வெளியிடுவது என்பது திட்டம். பல பத்திரிகைக் கம்பனிகளைப் போய்க் கேட்டார். அனைவரும் மறுத்துவிட்டனர். இது விற்காது, இலாபம் வாராது என்றனர். இலாபம் வாராவிட்டாலும் பாதகமில்லை, வெளியிட விரும்புகிறேன் என்றார் வாலஸ். நம்பிக்கையுடன் வாலஸும், அவர் மனைவியும் பத்திரிகையை ஆரம்பித்தனர். வாலஸ் இறந்தபொழுது பத்திரிகைக்கு 3 கோடி சந்தாதாரர்களும், 10 கோடி பிரதியும் விற்றது. அது Readers Digest.

இது சரித்திரம்.

10ஆம் வகுப்பு படித்தவர் எண்ணிக்கை ஒரு கட்டத்தைத் தாண்டும்பொழுது நாட்டில் படிக்கும் நினைவு (itching for reading) கடலலையாக எழுந்த நேரம், அவர்களுடைய ஆர்வத்தின் பிரதிநிதியாக Dewitt Wallace டெவிட் வாலஸ் செயல்பட்டதால் அவர் முயற்சிக்கு சமூகம் முழு ஆதரவு அளித்து, அவருக்குப் பரிசளித்தது.



- ❖ 1920இல் கார் அதுபோல் விற்றது.
- ❖ 1990இல் கம்ப்யூட்டர் அதைப்போன்று விற்க ஆரம்பித்தது.

  இவை வியாபாரத்தில் எழுந்த waves of prosperity அதிர்ஷ்ட அலைகள்.

- ❖ இன்று நர்சரி பள்ளி முதல் மெடிகல் காலேஜ்வரை இந்தியாவில் படிப்புக்கு அதிர்ஷ்டம் வந்துவிட்டது.

சமூகம் முன்னேறும் நேரம், தனி மனிதன் தன் முழு முயற்சியை ஒரு துறையில் முடித்தால், சமூகம் தன் முழுப்பரிசை முன்வந்த மனிதனுக்குத் தருவதால் Readers Digest கோடிக்கணக்காக விற்கிறது. இன்று இந்தியாவில் இதுபோன்ற அதிர்ஷ்டம் எல்லாத் துறைகளிலும் காத்திருக்கிறது. முழு முயற்சி எடுத்து முடிப்பவருக்கு சமூகத்தின் முழுப்பரிசு காத்திருக்கிறது.

மனிதன் முடியுமிடத்தில் அன்னை ஆரம்பிக்கின்றார் என்பது பகவான் வாக்கு. நாடும், விவசாயமும், வியாபாரமும், கல்வியும், தொழிலும் முயற்சியுள்ள மனிதனுக்கு முழுமையான ஆதரவு தர விரும்பும் நேரம், அன்பர்க்கு அற்புதமான நேரம்.

- *எந்த அன்பர் தம் தொழிலில் தம் முயற்சியை முழுமையாக, சிறப்பாக பூர்த்தி செய்கிறாரோ, அவருக்கு அன்னை அருளை அதிர்ஷ்டமாகத் தருகிறார்.*

**அன்னை வரும் தருணம், அதிர்ஷ்டம் வரும் தருணம்.**

❋ ❋ ❋

## அன்பன் பெரிய இடத்துப் பிள்ளை

*(சென்னை-மாம்பலம் தியானமையத்தில் 12.8.2001 அன்று திருமதி. விஜயா நாராயணன் நிகழ்த்திய உரை).*

"*யோக வாழ்க்கை*" எனும் நூலில் - **பிரம்மம்** - என்ற தலைப்பிலுள்ள 14 கருத்துகளின் இரத்தினச் சுருக்கம் கீழ்க்காண்பது.

1. தானே பிரம்மம் எனில் மனம் பிரம்மத்தைத் தொடும். — I. 583
2. நம் பார்வையை மாற்றினால் ஜடம் திருவுருமாறும் — I. 641
3. ஹாம்லெட் எழுதிய பரம்பொருள் — I. 742
4. பரம்பொருளே சிருஷ்டி — I. 764
5. பரம்பொருளும் சிருஷ்டியும் ஒன்றில் மற்றதாக உறைகின்றன — I. 797
6. நாம் சிருஷ்டியில் பரம்பொருளாக மாறமுடியும் — I. 826
7. ஜடத்திலும் பரம்பொருள் தன்னை வெளிப்படுத்தும் — I. 856
8. பரம்பொருள் உணர்வைத் தொட்டால் லீலை நம் உணர்வுக்குத் தெளிவாகும் — I. 903
9. மனம் பிரம்மத்தையடையும் வழி — II. 2
10. மனிதனின் பிரம்ம விழிப்பு பரம்பொருளை வெளிப்படுத்தும் — II. 3
11. பிரம்மம் பயத்தை அழிக்கும் — II. 161
12. தனித்துப் பொலியும் தெய்வாம்சங்கள் இணைந்து மலர்ந்து மிளிரும் நிலை சத்தியஜீவியம் — II. 175
13. பிரம்மத்திலில்லாதது சிருஷ்டியிலில்லை — II. 949
14. முரண்பாட்டை எழுப்புவது சிருஷ்டியிலுள்ள பிரம்மமாகும் — II. 950



விவசாயியைவிட வியாபாரி வசதியானவன். படித்தவர்கள் செய்யும் தொழில் அதிகப் பலன் தரும். எந்த அம்சமிருந்தாலும் வாழ்வில் முன்னுக்கு வர அது உதவும். மேல்நாட்டார் அதிக முன்னுக்கு வந்துள்ளதற்கு முக்கிய காரணம் படிப்பு. இந்தியர்கட்கு மேல்நாட்டார் பெறாத ஆன்மீக ஞானம் உண்டு. அது வாழ்வில் வெளிப்பட்டால், நாம் மேல்நாட்டாருக்கு சமமாகவும், அதிகமாகவும் முன்னேறலாம்.

பெரிய இடத்துப் பிள்ளைகள் வாழ்க்கையை மேல்மட்டத்தில் ஆரம்பிக்கின்றார்கள். அவர்களுக்கு அதிகமாகப் பலிக்கிறது. அன்பர்கட்கு அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் உண்டு. அதற்கேற்ப அவர்களிருந்தால்,

**அன்பர்கள் பெரிய இடத்துப் பிள்ளைகளாவார்கள்.**

ஸ்ரீ அரவிந்தர் பிரம்மம் சித்தித்தவர்; விழிப்பில் சித்தித்தவர்; சித்தி உடல்வரை இறங்கியும் சித்தித்தது. ஸ்ரீ அரவிந்தர் ரிஷியில்லை, அவதாரமுமில்லை. அவதாரம் என்பது ஆண்டவனின் அம்சம் மனிதனில் பிறவி எடுப்பது. ஆண்டவனுடைய பகுதி ஸ்ரீ அரவிந்தர் என அன்னை கூறியுள்ளார். ஆண்டவன், 'இது இறைவன் வரும் தருணம்' எனக் கூற புவியில் வந்தது ஸ்ரீ அரவிந்த அவதாரம். அதை நமக்கு ஆன்மீக வாழ்க்கைப் பலனாக அருள வந்தது அன்னையின் அவதாரம். அதன் முக்கிய அம்சம் பிரம்மம். அதுவும், வாழ்வில் வெளிப்படும் பிரம்மம்.

மேற்கண்ட 14 கருத்துகளும் 'யோக வாழ்க்கை' எனும் நூலில் நீண்ட வாக்கியமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதன் தானே பிரம்மம் என அறிந்தால், தன் செயல் பிரம்மத்தின் செயல் என அறிந்தால், பிரம்மம் அவன் வாழ்வில் பிரவாகமாக வெளிப்படும். இன்று நம் பார்வை குறுகலானது. பார்வை மாறினால் ஜடம் திருவுருமாறும்.

| நமது பார்வை | பிரம்மம் வெளிப்படும் பார்வை |
|---|---|
| 1. வாழ்வுக்கு அளவுண்டு. | அளவற்ற அபரிமிதமானது வாழ்வு. |
| 2. அதிகமாக ஆசைப்படக்கூடாது. | பேராசை கூடாது, பெரிய ஆர்வம் அவசியம். |
| 3. நாம் சமூகத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் | நாம் சமூகத்தை உருவாக்குகிறோம். |
| 4. ஆயுளுக்கு அளவுண்டு. | ஆர்வமாக வாழ்ந்தால், அளவில்லை. |
| 5. நடைமுறை முக்கியம். | நம் முறை நடைமுறையை நிர்ணயிக்கும். |

நமது பார்வை அன்னைக்குரிய பார்வையானால், அதன் மூலம் பிரம்மம் வெளிப்படும். பிரம்மம் வெளிப்பட்டால் கவி, காலத்தைக் கடந்த இலக்கியமாக ஹாம்லெட் போன்ற காவியத்தை எழுதுவான். 'அதெல்லாம் நம்மால் முடியுமா?' என்பது பிரம்மத்தை அறியாதவனின் கேள்வி. எதுவும் முடியும் என்று கூறுவது பிரம்ம ஞானம்.

Lady Anna என்பது பிரசித்தி பெற்ற கதை. ஒரு Duke £30,000 வருமானமுள்ளவன். இவன் போக்கிரி. அழகான பெண்களைத் திருமணம் செய்துகொள்வதாகக் கூறி, அயல்நாட்டில் வைத்திருந்து, குழந்தை பிறந்தால் சிறிதளவு பணம் கொடுத்து அனுப்பிவிடுவான். ஜோசபின் என்ற ஏழையான பெரிய



இடத்துப் பெண்ணை அதுபோல் நாடுகிறான். திருமணமாக வேண்டும் என்று வற்புறுத்துகிறாள். முறையாகத் திருமணம் நடந்து, குழந்தை பிறந்தவுடன், "எனக்கு ஏற்கனவே இத்தாலியில் மனைவி இருப்பதால், இத்திருமணம் செல்லாது" என்று கேலி செய்கிறான். ஒரு டெய்லர் ஜோசபினுக்கு ஆதரவு தருகிறார். 20 வருஷமாகிறது. Duke எவளோ ஒருத்தியுடன் வருகிறார். அவளுக்குச் சொத்தை எழுதி வைத்துவிட்டு இறந்துவிடுகிறார். உயில் எழுதும் சமயம் அவருக்குப் பைத்தியம் என்பதால், உயில் செல்லாது. Dukedom என்பதில் பட்டம், பணம் இரண்டும் சேர்ந்தும் இருக்கும், பிரிந்தும் இருக்கும். இறந்தவர் அண்ணன் மகனுக்குப் பட்டம் போகிறது. அவர் பெயர் பிரெடரிக். அவர், ஜோசபின் திருமணமான மனைவியில்லாததால், சொத்து தனக்குரியது என கேஸ் போடுகிறார். இத்தாலியில் மனைவி இருக்கிறாளா, சொத்து கோரி வருவாளா எனத் தெரியவில்லை. இல்லை என்பது பொதுவான அபிப்பிராயம்.

ஜோசபின் மகள் அன்னா. அவள் Lady Annaவாக ஏழ்மையில் டெய்லர் வீட்டில் வாழ்ந்தவள். டெய்லர் மகன் டேனியலை திருமணம் செய்துகொள்ள முடிவு கொடுத்துவிட்டார். Frederickஇன் வக்கீல் கேஸ் நடத்துவதற்குப் பதிலாக, "ஏன் Annaவும் Frederickக்கும் திருமணம் செய்துகொள்ளக் கூடாது?" என்று கேட்கிறார். இங்கிலாந்தில் மாமன் மகளைக் கட்டிக்கொள்ள மாட்டார்கள். பெரியப்பா மகளைக் கட்டிக் கொள்வார்கள். திருமணம் நடந்தால் கேஸ் இல்லை. பெண்ணும், பிள்ளையும் சந்திக்க ஏற்பாடாகிறது. பெண் தன் முடிவை Frederickஇடம் தெரிவித்துவிடுகிறாள்.

முதலில் Frederick ஜோசபின் மனைவியில்லை என நினைத்தவர், பழக ஆரம்பித்தபின் அவர்கட்கு உரிமை உண்டு என்று ஏற்றுக்கொள்கிறார். சொத்து Annaவுக்கும், தாயாருக்கும்

வந்துவிட்டது. Frederickக்குப் பணமில்லை, உரிமையில்லை. பட்டத்திற்குரிய தகுதியும், பண்பும், நிதானமும், விவேகமும் அவரிடம் நிறைந்துள்ளன. சட்டப்படி உரிமையில்லாதவருக்கு, சந்தர்ப்பம் கட்டாயப்படுத்தாதபொழுது, நியாயப்படி அவருக்குச் சேர வேண்டியது எதுவுமில்லை என்றபின்,

- ❖ நாடு முழுவதும் அவருக்குச் சொத்து வேண்டும் என விழைகிறது.
- ❖ டேனியல் 'சொத்தை Frederick எடுத்துக் கொள்ளட்டும்' எனப் பேசுகிறான். 'எனக்குப் பெண்தான் வேண்டும்' என்கிறான்.
- ❖ Anna தானே முன்வந்து Frederickக்கு £10,000 - வருஷத்திற்கு - தருகிறாள்.
- ❖ பொதுவாக Frederick பணம் பெறுவது சரி என்று அபிப்பிராயம். சொத்து முழுவதும் அவரைச் சேர வேண்டும் என்று நாடு முழுவதும் கருதுகிறது.

ஜோசபின் அதை விரும்பி ஆமோதிக்கின்றாள். முடிவில் Anna டேனியலைத் திருமணம் செய்துகொள்கிறாள். பெரும் பணம் எந்தக் காரணமுமின்றி Frederickக்கு வருகிறது. கதையில் இந்த இடம் இக்கட்டுரைக்குரிய கருத்து. உலகத்திற்கு உரிய சட்டம் ஒன்றுண்டு. தகுதியுள்ளவனை அதிர்ஷ்டம் தேடி வரும். உழைப்பாளி நெடுநாள் உழைத்துப் பெறுவதை அறிவுடைய, அந்தஸ்துள்ள, உயர்ந்தவன் அவன் தகுதிக்காக அதைப் பெறுவான் என்ற சட்டம் இக்கதையில் சிறப்பாக வெளிப்படுகிறது. ஆன்மீகத்தை ஏற்றவர்கள் உயர்ந்தவர்கள். அன்னையை ஏற்பது உசிதம், உன்னதம். ஏற்றவர்க்கு ஏற்கும் தகுதியிருந்தால், எதுவும் அவர்களை நாடி வரும்.

- ❖ காலம் மாறும்பொழுது 150 ஆண்டுப் பலனை, 15 ஆண்டில் தொழில் அதிபர்கள் பெறுகிறார்கள். டாட்டா 150இல் பெற்றதை அம்பாணி 15இல் பெற்றார்.
- ❖ அன்னையைத் தகுதியுடையவர் ஏற்றால், உலகில் எவர் சாதித்ததையும் அன்பர் சாதிப்பார். ஏனெனில் அன்பர்கள் பெரிய இடத்துப் பிள்ளைகள்.
- ❖ எதை அன்பர் நாடினாலும், நாட்டின் உச்சிக்கு அவர் போவார்.
- ❖ பெரிய இடத்துப் பிள்ளைகள் அடிமட்டத்தில் ஆரம்பிப்பது இல்லை.
- ❖ அன்பர்கள் உச்சியில் வாழ்வை முடிப்பார்கள்.

நாம், அன்பர்கள் அப்படி உயர்வதைக் காணவில்லையே என்று நினைக்கலாம். ஆரம்பத்தில் பிரம்மத்தைப் பற்றிக் கூறிய 14 கருத்துகளை விவரமாக 'யோக வாழ்க்கை'யில் காணலாம். மேலும் விளக்கங்களை 'யோக வாழ்க்கை விளக்கம்' என்ற நூலில் காணலாம்.

பரம்பொருளே சிருஷ்டி என்பது ஒரு கருத்து. அன்னையை ஏற்றால் - பொய்யை விலக்கி ஏற்றால் - அன்னை அளிப்பது பரம்பொருள். சிருஷ்டி முழுவதும் அதனுள் அடங்கும். வாழ்வும், அதன் உச்சமும் அதன் பகுதி. பரம்பொருளும், சிருஷ்டியும் ஒன்றில் மற்றதாக உறைகின்றன. அன்னையையும், சமர்ப்பணத்தையும் முன் வைத்துச் செயல்பட்டால், நாம் நடைமுறையில் இவ்வுண்மையைக் காணலாம். V.K.கிருஷ்ணமேனன் சென்னை வந்தபொழுது அவர் நண்பர் ஒருவர், "சிறப்பான இளைஞன் ஒருவன் வேலையில்லாமல் இருக்கிறான். அவனுக்கு உதவ முடியுமா" எனக் கேட்டார். மேனன் பையனைக் கண்டார். சிறப்பானவன் என்று தெரிந்தது. "என்னுடன் லண்டனுக்கு வா. அங்கு வேலை தருகிறேன்" என்றார்.

**சிறப்பானவனை சிறப்பை அறிபவர் கண்டுகொள்வார்.**

நாம் அன்னையை சத்தியவாயிலாக ஏந்திச் செல்வது உண்மையானால், வாழ்வு அதைக் கண்டுகொள்ளும். நம்முள்ளிருந்து பரம்பொருள் வெளிவரும். அது முடிவற்றது, அனந்தமானது, அது தரும் பலனை வாழ்வு அளிக்க முடியாது. 'நாம் சிருஷ்டியில் பரம்பொருளாக மாற முடியும்' என்பது அடுத்தது. பகவான் பரம்பொருள் உடலில் சித்தித்தவர். நாம் செய்யும் வேலை நம்மைப் பொருத்தவரை சிருஷ்டி. அச்செயலில் பகவானை வெளிப்படுத்துவது சமர்ப்பணம். சமர்ப்பணமான காரியம் 40,000 ரூபாய் சம்பாதிக்கப் போனால் 40 கோடி சம்பாதிக்கும் என்பதை அன்பர்கள் காண வேண்டும் என்றால், அவர்கள் அன்னை கூறிய 'Men, Countries, Continents, Truth or the abyss' என்பதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

பயம் தோல்வி தரும். அன்னையிடம் வந்தபின் பயந்த சுபாவமுள்ளவர் பயம் குறைந்திருப்பதைக் காணலாம். அன்னையை விலக்கில்லாமல் ஏற்றால், பயம் அறவே நீங்கும். 'தெய்வங்களிடையே தனிப்பட்டு பொலியும் அம்சம் சத்தியஜீவியத்தில் இணைந்து மிளிரும்' என்பது அன்பர் அன்னையை ஏற்கும்பொழுது, தெய்வநிலையைக் கடக்கின்றார் என்றாகிறது.

நாம் நம்மைப் பற்றி சிந்திக்கும்பொழுது வெற்றி, தோல்வி கணக்குப் போட்டு ஒரு முடிவுக்கு வருகிறோம். அது, 'நமக்கு இவ்வளவுதான். இதற்கு மேல் பேராசை கூடாது. நாம் யார் என்பதை மறந்து, ஒரேயடியாகப் பறக்கவா முடியும்?' என்பன போன்ற முடிவுகட்கு வருவோம். கணக்கு முடிந்த பிறகு அன்னை மிஞ்சும். அது மனத்திற்குத் தெம்பு தரும். அதுவே security. அது நாளுக்கு நாள் உயர்வதும் தெரியும். சில சமயம் எல்லாம் முடிந்தபின் சிறு சந்தோஷம் வரும். மற்ற சமயங்களில் சிறு விரக்தி எழும். நாம் அன்னையை அந்த இடத்தில் சிறு சந்தோஷத்திற்குப் பதிலாக, விரக்திக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்றுக் கொண்டதற்கு அடையாளம்,

- ❖ 'அந்த இடத்தில்' சந்தோஷம் துள்ளி எழும்.
- ❖ அப்படி எழும் சந்தோஷம் நாளுக்கு நாள் வளரும் (ever increasing).
- ❖ சந்தோஷம் அதிர்ஷ்டத்தை உட்கொண்டது.
- ❖ பரம்பொருள், பிரம்மம் என்பதற்கு வாழ்வில் அதிர்ஷ்டம் எனப் பெயர்.
- ❖ அதிர்ஷ்டம் சித்திப்பது பிரம்மம் சித்திப்பதாகும்.

❋ ❋ ❋


## சொசைட்டியின் வெளியீடுகள்

**கர்மயோகியின் நூல்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. 20 |
| 2. | மனம் - ஜீவனின் முக்கிய கரணம் | ரூ. 20 |
| 3. | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. 20 |
| 4. | சிறியதும் பெரியதும் | ரூ. 20 |
| 5. | கணவன் மனைவி | ரூ. 20 |
| 6. | இரத்தினச் சுருக்கம் | ரூ. 20 |
| 7. | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. 40 |
| 8. | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.100 |
| 9. | அதிர்ஷ்டம் | ரூ.100 |
| 10. | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.100 |
| 11. | பிரார்த்தனை பலிக்க வேண்டும் | ரூ.100 |
| 12. | பரமனை நாடும் ஜீவாத்மா | ரூ. 20 |
| 13. | ஸ்வரூபம் சுபாவம் | ரூ. 20 |

**தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவு தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.**

## P. 74 சக்தி - முடிவற்றது
## சக்தியே பிரம்மம்

ஹிருதய சமுத்திரம் ஆதியும், அந்தமுமில்லாத அனந்தமானது என்றோம். சக்தி சலனப்படுகிறது என்றால், தத்துவப்படி சலனமற்ற சக்தியுண்டு எனப் பொருள். உலக வாழ்வில் எதற்கும் எதிரானதுண்டு. ஒளி, நல்லது, உயர்ந்தது, சிறியது என எதைக் கூறினாலும் அவற்றிற்கு எதிரான இருள், கெட்டது, தாழ்ந்தது, பெரியது என்பவை எழும். அதேபோல் சலனம் என்றால் சலனமற்ற நிலை - அமைதி - உண்டு என்பது தர்க்கம். சக்தி சலனமற்றிருந்தால் அது என்னவாக இருக்கும்? சலனமான சக்தி ஓடும் நதியாகவும், எரியும் தழலாகவும், வீசும் காற்றாகவும், பரவும் ஒளியாகவுமிருக்கும். சலனமற்ற சக்தியை நாம் கற்பனை செய்ய முடியாது. நமக்குத் தெரிந்த எல்லாச் சக்திகளும் சலனத்தால் செயல்படுபவை. சலனமற்ற சக்தி, சக்தியாக இருக்காது. சக்தியாக இல்லாவிட்டால் என்னவாக இருக்கும்?

சிருஷ்டியில் உள்ள அனைத்தும் ரூபம், அளவு, குணம் என்ற ஒன்றைப் பெற்றிருக்கும். இலை, மலை, மனிதன், நீர் என எதை நினைத்தாலும் அவற்றிற்கு இம்மூன்றும் இருக்கும். இவற்றுள் ஒன்றாவது இல்லாதது சிருஷ்டியில் இல்லை. சிருஷ்டியில் இல்லாதது, சிருஷ்டிக்கு முந்தைய நிலையாகும். அது பிரம்மம் எனப்படும். சலனமற்ற சக்திக்கு ரூபமில்லை, குணமில்லை, அளவில்லை. எனவே சலனமற்ற சக்தி பிரம்மம் Absolute எனப்படும்.



**பிரம்மம் என்பது எதையும் சிருஷ்டிக்கவல்லது.**

❖ கவிகளும், கலைஞர்களும் இதைத் தவறாது ஏதோ ஓரளவில் காண்கின்றனர்.

**வாழ்வில் உதாரணம்**

திறமைசாலிகட்கு கோபம், அவசரம் போன்ற குறை இருப்பதுண்டு. அவை குணங்கள், கெட்ட குணங்கள். கெட்ட குணங்களை அவர் விட்டுவிட்டால், அவரது திறமை அதிகமாகப் பெருகும். அவசரம் போனால் பொறுமை வருகிறது. கோபம் போனால் சாந்தம் வருகிறது. அவை நல்ல குணங்கள். குணங்கள் உள்ளவரை நாம் மனிதன் என்ற நிலையில் இருப்போம்.

ஆசையை அழிக்க வேண்டும் என்ற திருமூலர் ஆண்டவன் மீதும் ஆசை கூடாது என்றார். ஆண்டவன் என்ற பெயரில் ஆசை எழுந்தாலும், அது தேவையில்லை என்றார். அதே விளக்கத்தை நாம் ஏற்போம். குணம் என்பது மனித நிலை. கெட்ட குணம் போக வேண்டுமென்பதை ஒத்துக்கொள்வோம். அவசரம் போய் பொறுமை வருகிறது. பொறுமை நல்ல குணம். பொறுமையும் குணம் என்ற பெயரில் தேவையில்லை எனில் அழிவது குணம். குணம் அழிந்தால் மனித நிலையைக் கடக்கிறோம். தெய்வ நிலையையும் கடக்கிறோம். குணம் அழிந்தபின் நாம் பிரம்மமாகிறோம். அவசரம் இருக்காது. பொறுமையிருக்குமோ?

பொறுமை என்ற குணமிருக்காது.

குணத்தைக் கடந்த பிரம்ம நிலையில் பொறுமை அளவு கடந்திருக்கும். ஆனால் பொறுமை குணமாக இருக்காது. எந்தத் திறமையையும் உற்பத்தி செய்யும் திறமை வரும். அவசரத்தைக்

கடப்போம். பொறுமை வந்தால், குணம் என்ற உருவத்திலும் பொறுமை தேவையில்லை என்று தியானத்தை மேற்கொண்டால், நாம் எல்லாவற்றிலிருந்தும் விடுபடுவது தெரியும். மௌனத்தைக் கடப்போம், சாந்தியைக் கடப்போம், ஜோதியைக் கடப்போம். எல்லாவற்றையும் கடந்து 'அது' என்ற பிரம்மநிலையை, தியானம் அடையும்.

- ❖ அவசரத்தை இழந்ததுபோல் பொறுமை என்ற குணத்தையும் இழந்தால், பிரம்மமாவோம்.
- ❖ பிரம்மம் என்ற நிலையில் திறமை அளவுகடந்து பெருகும்.

சலனத்தைக் கடந்த சக்தி பிரம்மம். குணத்தைக் கடந்த மனம் பிரம்மம். எல்லாவற்றையும் கடந்த நிலை பிரம்மத்திற்குரிய நிலை.

❋ ❋ ❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தன்னலமற்ற நம் செயல்களில் அகந்தை மறைந்திருப்பதைக் காண முடிவது அகந்தை அழிந்ததற்கு அத்தாட்சி.

தூய சேவையிலும் அகந்தையைக் காண்பவனுக்கு அகந்தையில்லை.



## அபரிமிதமான செல்வம்

உடலாலும், உணர்வாலும் மனிதன் உழைத்தபொழுதும் மனம் பின்னணியிலிருந்தது. பின்னணியிலிருந்த மனம் முன்னணிக்கு வந்து நேரடியாகச் செயல்பட்டது. வீராணம் ஏரியை இங்கிலாந்து இன்ஜினீயர்கள் வந்து பார்த்தனர். 1000 ஆண்டுகட்கு முன் இன்ஜினீயரிங் அறிவு வளராத காலத்தில் எப்படி இந்த ஏரியைக் கட்டினர் என ஆச்சரியப்பட்டனர். கோபுரம், பிரமிட் போன்றவை கட்டியது உடல் உழைப்பால் முடியாது. அது அறிவு வளர்ச்சியால் நடந்த செயல்கள். பணம் என்று முதலில் ஏற்பட்டபொழுது அது ஓர் எண்ணம், அது மனத்தின் செயல். பணம் மனத்தால் ஏற்படுத்தப்பட்டது. மனம் எண்ணத்தாலானது. எண்ணக் கோவைகள் சிக்கலின்றி சீராக அமைந்தால், எண்ணம் நிர்வாகத் திறன் (organising power) பெறுகிறது. அதுவே சட்டமாகிறது. மனத்திற்கே எண்ணமுண்டு. எண்ணம் செயலைக் கட்டுப்படுத்தும். செயல்களின் போக்கையறிந்து அவற்றை எண்ணத்தின் திறனால் கட்டுப்படுத்துவது கட்டுப்பாடு. அதன் சிகரம் சட்டம், ஒழுங்கு (rule). மனிதனுடைய உழைப்பு, பொருள்களை உற்பத்தி செய்து விநியோகம் செய்ய உதவும் கருவி மனம். உழைப்பின் சிறப்பு, பொருள்களின் அளவு, தன்மை, விநியோகத்திற்குரிய நிபந்தனைகள் மனத்தால் அறிந்து, அதை நிதானப்படுத்தி, நிர்ணயம் செய்வது விலை எனப்படும். விலை என்பது மனத்தால் குறிக்கப்படுகிறது. இவ்வெண்ணக் கோவைகளின் மையம் பணம். இதற்கு அமைப்பு, ஸ்தாபனம், நிர்வாக அமைப்பு எனப் பெயரிடலாம். இது மனத்தின் செயல். மனம் செயல்பட்டால், அங்கு இவ்வமைப்பிருக்கும். இது சமூகத்தில் ஒரு புரட்சிகரமான மாறுதல், சமூகம் வளர (evolutionary) உதவும் மாறுதல். அதனால் ஏற்பட்டவை,

❖ தன் உபரி சக்தி, உபரி உற்பத்தி அழிவதற்குப் பதிலாக அதை வேறொரு நாளைக்குப் பயன்படுத்த முடியும்.

❖ ஒருவருடைய உபரியை மற்றொருவர் பயன்படுத்தலாம்.

❖ சமூகம் தனிமனித வாழ்வைச் சிறப்பாக்க முடியும்.

❖ ஒவ்வொருவரும் அடுத்தவர் வாழ்வு பயனுற உதவ முடியும் என்பவை பணம் ஏற்பட்டதால் ஏற்பட்ட பெரிய புரட்சிகரமான மாறுதல்கள்.

❖ Unity, Mutuality, Harmony ஒற்றுமை, பரோபகாரம், சுமுகம் என்பவை சத்தியஜீவிய வாழ்வுக்கு உயிர். அவற்றை நிலைநாட்டப் பயன்படுவது பணம் என நாம் அறிகிறோம்.

பணம் என்பது மனிதத் திறமையின் சின்னம். நேற்றைய உழைப்பைப் பணம் மூலம் நாளைக்குப் பயன்படுத்த முடியும். இளம் வயது சேமிப்பை வயோதிகத்திற்குப் பயன்படுத்தலாம் என்பது தினமும் வேட்டையாடி உழைத்தவனுக்குப் புரியாத ஒன்று. புலியானாலும், பல் போனபின், உடலில் தெம்பு குறைந்தபின், பட்டினி கிடந்து சாகும். மனிதன் அப்படியிருந்தவன். சேமிப்பால் எதிர்காலத்தில் வாழலாம் என்பது காலத்தை வெல்வதாகும். கங்கையில் பிரவாகமாக வெள்ளம் கடலையடைகிறது. காவிரி வரண்டுள்ளது. கங்கை நீர் காவிரிக்குப் பயன்படாது. பணம் ஓரிடத்தில் சம்பாதிக்கப்பட்டாலும், வேறு இடத்தில் உதவும். வெளிநாட்டிலும் உதவும். இது இடத்தை வெல்வதாகும். தனிமனிதன் தனிமனிதனாகவே வாழ்ந்தால் பணம் இல்லை. சமூகமாக வாழும்பொழுதும் நோட்டிற்கு மதிப்பு வருவது மனிதனுக்கு சர்க்கார் மீது நம்பிக்கையிருப்பதால்தான். சர்க்கார் மீது நம்பிக்கை போன நாடுகளில் பணக்கத்தைகள் வீசப்பட்டன. காலத்தையும், இடத்தையும் வெல்லும் பணம் நம்பிக்கையால் உற்பத்தியாகிறது. இதன் மதிப்பு நிர்வாகத் திறமையைப் (organisation) பொருத்தது.



❖ கடந்த கால உழைப்பை எதிர்காலத்திற்கு உபயோகப்படுத்துவதும்,

❖ ஓரிடத்து உற்பத்தியை அடுத்த ஊருக்கு, அடுத்த நாட்டிற்கு எடுத்துப் போக உதவுவதும்,

❖ சமூகத்தை நம்பும் மனிதனுக்கு சமூகம் உதவும் கருவியாக இருப்பதும்,

❖ உழைப்பு, திறமை, தரம், மதிப்பு, இவற்றைச் சேர்த்து (organise) நிர்ணயிப்பதும் பணம் என்பதால்,

❖ Energy, organisation, trust உழைப்பு, நிர்வாகத் திறமை, நம்பிக்கை ஆகியவற்றால் பணம் உற்பத்தி செய்யப்படுகிறது.

உழைப்பு என்பது சக்தி; நிர்வாகம் என்பது எண்ணக் கோவை; நம்பிக்கை என்பது மனம் ஏற்பது ஆகியவை முழுவதுமாக மனத்தின் அம்சங்கள். மனம்,

❖ சக்தியை அளவுகடந்து எழுப்பும்.

❖ Organisation நிர்வாக முறையை மனம் உற்பத்தி செய்ய அளவில்லை.

❖ முடிவில்லாத நம்பிக்கையை மனத்தால் எழுப்ப முடியும்.

இவை மூன்று மட்டுமே பணத்தின் அம்சங்கள். இவற்றை மனம் முடிவில்லாமல் உற்பத்தி செய்ய முடியும் என்பதால், மனத்தால் அளவு கடந்து பணத்தை உற்பத்தி செய்ய முடியும் என்பது தெளிவு. மேலும் பணத்திற்குச் சில அம்சங்களுண்டு.

1. பணம், பணப்புழக்கம் விரிவடைய உதவும்.
2. பணத்தின் வேகம் பணத்தின் மதிப்பை நிர்ணயிக்கும்.
3. எவ்வளவு தூரம் பணம் ஏற்கப்படும் என்பது ஓர் அம்சம்.
4. எத்தனை நாடுகளில் நம் பணம் ஏற்கப்படும் என்பது அடுத்தது.

5. எத்தனை வகையாகப் பணம் பயன்படும், எந்தக் கருவியைப் பணம் வாங்க முடியும், எதை வாங்க முடியாது என்பது முக்கிய அம்சம்.

வேகமாகப் பணம் புரளும்பொழுது பணம் அதிகமாகச் சம்பாதிப்பதை வியாபாரி அறிவான். வாடகைக்கு வீடு வேண்டுமானால், பணம் மட்டும் போதாது. கேட்ட வாடகையைத் தருகிறோம் என்றால், எல்லோருக்கும் வாடகைக்கு வீடு தர மாட்டார்கள். கம்பனி நடத்த குடியிருக்கும் வீட்டைத் தர மாட்டார்கள். அதுவே பெரிய கம்பனி எனில் தருவார்கள். வாடகைப் பணம் சாதிக்காததை கம்பனியின் செல்வநிலை சாதிக்கும். இன்று IAS உத்தியோகம் விலை கூறப்படவில்லை. சென்ற நூற்றாண்டில் இங்கிலாந்தில் ராணுவ ஆபீசர் வேலைகள், கப்பல் கேப்டன் வேலைகள் விலைக்கு விற்கப்பட்டன. மெடிகல் டிரீட்மெண்ட்டுக்கு அதிகப் பணம் தேவை. சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக ஏராளமான பணம் தேவை. எலக்ஷனில் ஜெயிக்க லட்சக்கணக்கான பணம் தேவை.

❖ பெரும் பணம் தேவைப்படும் செயல்கள் இவை என்றாலும், பணம் இவற்றைச் சாதிக்கிறது என்பது உண்மை என்பதால், பணத்தின் மதிப்பு வளருகிறது.

❖ இன்றும் பணத்தால் சாதிக்க முடியாதவையுண்டு. அவை பணத்திற்கு எட்டுமானால், பணத்தின் மதிப்பு உயரும்.

இந்திய ரூபாய் 20 நாடுகளால் ஏற்கப்படுகிறது என்பது 40 நாடுகளானால், நாம் செலவு செய்யும் ரூபாயின் மதிப்பு உயருகிறது. 1 டாலர் விலை 3¾ ரூபாயாக 1950லிருந்து இன்று 45 ரூபாயாகிவிட்டது. மீண்டும் 3¾ ரூபாயானால் நாம் அமெரிக்கப் பொருள்களை மலிவாக வாங்கலாம். ரூபாயின் மதிப்பு உயரும். ரூபாயின் பயன் அதிகப்பட்டால், மதிப்பு அதிகப்படும்.



மனிதன் உடலுழைப்பிலிருந்து உயர்ந்து அறிவால் உழைக்க ஆரம்பித்தால், அவனது உற்பத்தித் திறன் வளருகிறது. பாங்க் செக்கும் தபாலில் (physical transmission) அனுப்ப வேண்டி இருக்கிறது. இது ஆயிரத்தில் ஒரு விஷயம். இன்று அது கம்ப்யூட்டர் வழியாகப் போகிறது. வருஷத்தில் 10 கோடி வியாபாரம் உள்ள கம்பனியில் தினமும் ரூ.3 லட்சம் சராசரியாக செலவாகும். பணவரவு 2½ லட்சமானால், தட்டுப்பாடு 4 லட்சமானால் சௌகரியமாக இருக்கும். ஒரு லட்ச ரூபாய் செக் வசூலாக 1 வாரம் ஆகிறது. இந்த மாதம் 30 லட்ச ரூபாய் செக் வந்துள்ளது. கம்பனி 30 லட்சம் வாடிக்கைக்காரர்கட்குத் தர வேண்டும். வர வேண்டிய பணம் 1 வாரத்தில் பாங்க் மூலம் வசூலாகும். கம்ப்யூட்டர் மூலமாக வசூலானால் 1 நாளில் வசூலாகும். அதாவது 30 லட்ச ரூபாய் பணம் 7 நாட்கள் அதிகமாகப் பயன்படும். இந்த மாதம் 30 லட்சம் வசூலாவதற்குப் பதிலாக 23 நாளில் 30 லட்சம் வந்து பணத் தட்டுப்பாடு குறையும். இது ஒரு சிறு உதாரணம். இது போன்ற சிறு செயல்கள் பணத்தைப் பொருத்தவரை 15, 20 உள்ளன. ஒவ்வொரு முறையும் கம்பனியின் பணப் புழக்கத்தை 5 or 10% அதிகப்படுத்தும். அதனால் கம்பனி தன் பணப் புழக்கத்தை (cash flow) 100% அதிகப்படுத்த முடியும். மாதம் 30 லட்சம் செலவாகும் கம்பனிக்குப் பணம் தாராளமாகப் புரளும்படி மாதம் 60 லட்சம் பணம் வரும். அனுபவப்படுபவர்கட்கு இது தெரியும் என்றாலும், இவை மனதில் படுவதில்லை.

இவை புற நிகழ்ச்சிகள். ஒவ்வொரு புற நிகழ்ச்சிக்கும் உரிய அகவுணர்வுண்டு. ஒருவருக்கு பாக்கித் தர வேண்டுமானால், அவர் கேட்கட்டும் கொடுக்கலாம் என்பதும், கேட்பதற்கு முன் கொடுத்துவிட வேண்டும் என்பதும் எதிரான மனநிலைகள். அகவுணர்வு எல்லாப் புற நிகழ்ச்சிகட்கும் உண்டு. அவை சக்தி வாய்ந்தவை. நம்பிக்கையை நேரடியாகவும், சக்தியை

மறைமுகமாகவும் வளர்ப்பவை. பணம் சம்பந்தப்பட்ட எல்லா அம்சங்களையும் ஒருவர் அறிந்து ஒன்றுவிடாமல் பின்பற்றினால் அவர் பணவரவு 30 அல்லது 40 மடங்கு பெருகும் என்பது உண்மை, அனுபவம். இவற்றை செய்வது மனம், மனத்தின் சிருஷ்டித்திறனை இங்குக் காணலாம்.

- ❖ எண்ணத்தைப் பொருத்து, ஆர்வத்தைப் பொருத்து, சக்தி அதிகரிக்கும். தனக்காகச் சம்பாதிப்பதைவிட குடும்பத்திற்காகச் சம்பாதிக்க அதிக ஆர்வம் எழும்.
- ❖ மனம் செயல்படும் வகை (organisation), யாருடன் எப்படிப் பழகுகிறோம் (co-ordination), எவற்றை எப்படிச் செய்கிறோம் என்பதாகும். இது அளவுகடந்து விரிவடையக்கூடியது. அளவுகடந்து co-ordination விரிவடையுமானால், பணம் அளவுகடந்து பெருகும் என்ற தத்துவத்தை நடைமுறையில் காணும் இடம் இது.
  - ❒ பணம் நம்பிக்கையால் ஏற்பட்டது. மனிதனை நம்புவதாலும், சமூகத்தை நம்புவதாலும் பணம் உற்பத்தியாயிற்று. பணம் என்பது நம்பிக்கை. நம்பிக்கையை அதிகமான பேருக்கு அளித்தால் பணம் அதிகமாகும். எத்தனைப் பேரை நம்பலாம் என்பதற்கு முடிவில்லை. நம்பிக்கையின் அளவை - ஆழத்தை - அதிகப்படுத்தலாம், அதற்கும் முடிவில்லை.

மனம் இந்த மூன்று விஷயங்களை - சக்தி, நிர்வாகம், நம்பிக்கை ஆகியவற்றை - வளர்க்க இசையும்வரை, மனத்தால் பணத்தை உற்பத்தி செய்ய முடியும். இந்த மூன்று அம்சங்கள் வளர அளவில்லை. பணத்தை உற்பத்தி செய்ய அளவில்லை.

உலகில் நாம் பெரும் பணம் பெருகும் இடங்களில் காண்பது இரண்டு. (1) திறமை, (2) டெக்னாலஜி. திறமையின்றி



டெக்னாலஜி பயன்படாது. திறமை தன்னளவில் பயன்படும். அறிவு, ஜடத்தில் வெளிப்படுவது டெக்னாலஜி. கத்தரிக்கோல் என்பது இரும்பு. இரண்டு கூரான இரும்புத் துண்டுகள் சரியாக இணைக்கப்பட்டால் வெட்டும் என்ற அறிவை கத்தரிக்கோல் இரும்பில் வெளிப்படுத்துகிறது. மரத்திலிருந்து ஒரு கிளை வேண்டுமானால் ஒடிக்க வேண்டும், பல முறை இழுக்க வேண்டும், சிம்ப வேண்டும், இச்செயலை நன்றாகச் செய்ய கத்தியால் வெட்டலாம். கத்தி என்பது வெட்டும் டெக்னாலஜி. கூரான இரும்பு நாம் கிளையை ஒடிப்பதை அழகாகச் செய்யும் என்பது டெக்னாலஜி. மனம் உடலைவிட உயர்ந்தது. உடல் சக்தியை வெளிப்படுத்துவதைவிட மனம் அதிக சக்தியை வெளிப்படுத்தும். உடல் வேலை செய்யும். என்ன வேலை செய்ய வேண்டும் என மனம் கூறும். அதனால் உடலின் பல வேலைகளைச் செய்யும் சக்தியைத் தர முடியும். உடல் தன் வேலையைச் செய்யும். மனம் பலரை வேலை செய்யச் சொல்லும். மனம் பெரியது. உடல் மனத்தை ஏற்றால், மனம் (descent) இறங்கி உடலில் வந்து உறைந்தால், உடல் தான் வழக்கமாக வெளியிடும் சக்தியைப் போல் பல மடங்கு சக்தியை வெளிப்படுத்தும். வேலை செய்யும் பொழுது எப்பொழுது 5 மணி அடிக்கும் என உடல் காத்திருக்கும். எவ்வளவு வேலை செய்தாலும் அதற்கேற்ப ஊதியம் (piece rate) உண்டு என்றால் 5 மணிக்குக் களைக்கும் உடல் 5½ வரை வேலை செய்யும். செய்யும் வேலை எவரும் அறியாத அளவுக்கு நமக்குத் தெரிந்தால் - அறிவு உடலில் வந்து வேலை செய்தால் - 5½ இல்லை, 6½ வரைக்கும் நேரம் போவது தெரியாது.

நாம் ஒரு வேலையை ஏன் செய்கிறோம் என்று தெரியாமல் இத்தனை நாள் செய்கிறோம். அது கடமையால் வந்தத் திறமை. அறிவு உடலில் வந்து வேலை செய்வது என்றால் என்ஜினீயருக்குத் தெரியாதது helperக்குத் தெரியும். வேலையின்

நுணுக்கத்தை அறிவுபூர்வமாகத் தெரிவது அறிவு உடலில் செயல்படுவதாகும். இவர்கட்கு 3, 4 மடங்கு தெம்பும், உற்சாகமும் இருக்கும். பொதுவாக கீழிருந்து எளிதில் மேலே போய்விடுவார்கள்.

- ❒ மனம் உடலைவிட அதிகத் தெம்புள்ளது.
- ❒ மனம் உடலில் வந்து விழிப்புற்றால் தெம்பு ஏராளமாக எழும்.

மேல்நிலை கீழே வந்து வேலை செய்யும்பொழுது பலன் அதிகம். ஒரு நாட்டின் சிறப்பு நாட்டில் அடிமட்டத்திலுள்ளவர் திறமையைக் காட்டும். பணம் அதுபோல் உற்பத்தியானது. அதனால் பணத்திற்கு வளரும் தன்மையுண்டு, வளர்ச்சிக்கு முடிவில்லை.

*தொடரும்...*

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

முன்னேற்றத்திற்குரிய கட்டங்கள்:

- ஒரு குறிப்பிட்ட காரியத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.
- நம் சொந்த உணர்வுகள் தடை என்பதை அறிய வேண்டும்.
- அவற்றை விட முடிவு தேவை.
- அன்னையை அழைக்க மனம் விழைய வேண்டும்.
- சர்வாரம்பப் பரித்தியாகியாக வேண்டும்.
- எவ்வளவு நாள் இம்முடிவு நீடிக்கின்றதோ அதுவே முன்னேற்றத்தின் அளவு.

கட்டங்கள் சரியானால் சட்டங்கள் செயல்படும்.



## அன்பர் கடிதம்

இரண்டு வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி. எங்கள் வீட்டில் Suguna jet மோட்டார் kitchenஇல் உள்ளது. வெய்யில் காலத்தில் எப்போதாவது ஒரு தடவை சுற்றிவிட்டு போட்டால்தான் மோட்டார் எடுக்கும். நான் மோட்டார் போட்டுவிட்டு பக்கத்து வீட்டுக்குப் போய்விட்டேன். மோட்டார் போட்டபோது கரண்ட் இருந்தது. நான் சென்ற 5 நிமிடத்தில் கரண்ட் நின்றுவிட்டது. மோட்டார் போட்ட விஷயம் மறந்துபோய் 10 நிமிடம் பக்கத்து வீட்டில் நின்றுவிட்டேன். பின்னர் எங்கள் வீட்டிற்கு வந்து பார்த்தால் கரண்ட் ஒயர் எரிந்த துர்நாற்றம் வந்தது. எங்கிருந்து வருகிறது என்று தெரியவில்லை. எங்கள் வீட்டில் உள்ள அனைத்து கரண்ட் ஸ்விட்ச் போர்ட் எல்லாம், கிரைண்டர் எல்லாம் பார்க்கிறேன், தெரியவில்லை. அன்னையிடம் பிறகு சொன்னேன். பிறகுதான் எனக்கு மோட்டார் போட்ட ஞாபகம் வந்தது. மோட்டார் இருக்கும் இடத்தில் இருந்து துர்நாற்றம் வந்தது. கரண்ட் நின்று மீண்டும் கரண்ட் வந்தபின் தொடர்ந்து ஓட முடியாமல் supply மட்டும் இருந்து உள்ளது. மோட்டாரைத் தொட சூடாக இருந்தது. மோட்டார் காயில் போய்விட்டது. எனக்கு ஒன்றும் புரியவில்லை. உடன் அன்னையிடம் போய் உட்கார்ந்து பிரார்த்தித்துக் கொண்டேன். "மோட்டார் ஒன்றும் ஆகக்கூடாது. நன்றாக மோட்டார் போட்டால் எடுக்க வேண்டும். இது உங்கள் அருளால் நடக்க வேண்டும்" என்று அன்னையிடம் சொல்லிவிட்டேன். என் கணவர் வந்தால், "நீ இவ்வளவு அஜாக்கிரதையாக இருக்கிறாய்" என்று திட்டுவார், என்ன செய்வது? அன்னையிடம் ஒப்படைத்து விட்டு மோட்டார் போட்டேன். எதுவும் ஆகாமல் மோட்டார் எடுத்தது. இது அன்னையின் அருளால் மட்டும்தான் முடியும். நான் அன்னையை மறந்துபோதிலும், unconsciousஆக

இருந்தபோதிலும் அன்னை consciousஆக எனக்கு அருள் புரிந்தார்கள். நன்றி தாயே!

என் மாமியார் இறப்புக்குப் பின்னர், அவர்களது நகைகளை அவரது இரு மகள்களுக்கும், இரு மகன்களுக்கும் சேர வேண்டும் என்பது என் மாமியாரின் விருப்பம். நான் மூத்த மாப்பிள்ளை என்பதால் என் மைத்துனர்கள், ‘‘அந்த நகைகளை வந்து நீங்கள் எங்கள் நால்வருக்கும் பகிர்ந்து தர வேண்டும்’’ என்று கேட்டனர். இந்தச் செய்தி வந்தது முதல் நானும், என் மனைவியும், ‘‘அந்த நகைகளை நீங்கள்தான் மதர் வந்து பகிர்ந்து அளிக்க வேண்டும்’’ என்று இடைவிடாமல் பிரார்த்தனை செய்தோம். ‘‘என் மாமியார் நகைகளைத் தராசு கொண்டு எடை போடாமல்தான் நான் 4 பேருக்கும் தருவேன். நீங்கள் அந்த காரியத்தைச் செய்ய வேண்டும்’’ என்று அன்னையிடம் பிரார்த்தித்தோம். என் மாமியார் வீட்டிற்குச் சென்று எல்லோரையும் வைத்துக்கொண்டு, அவரவர்களுக்கும் நகைகளை அன்னையிடம் சமர்ப்பணம் செய்து, பகிர்ந்து கொடுத்து முடித்தேன். என் மூத்த மைத்துனர், ‘‘யார் யாருக்கு எவ்வளவு நகைகள் கிடைத்துள்ளன எனத் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே எடை போட்டு பாருங்கள்’’ என்றார். எனவே அதையும் அன்னையிடம் சொல்லி, எடை போட்டேன். என் இரு மைத்துனர்களுக்கும் சமமான எடையுள்ள (each 160 gms.) நகைகளும், என் மனைவிக்கும், அவளது சகோதரிக்கும் (அதாவது இரு மகள்களுக்கும்) சமமான எடையுள்ள நகைகளும் (each 140 gms.) கிடைத்தன. எல்லோருக்கும் பெரிய ஆச்சரியம். ஆனால் நானும், என் மனைவியும் அன்னை செயல்பட்டதை நினைத்து நன்றி கூறினோம். இது consciousஆக அன்னையை நினைத்து நடந்த ஒரு நிகழ்ச்சி, அருள். அதை அன்னைக்கும், பகவானுக்கும் சமர்ப்பணம் செய்து, நன்றி தெரிவிக்கிறேன்.

❋ ❋ ❋



## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

தம்பி - இந்தக் குழந்தைக்கு என்ன செய்வது? இப்பொழுது தினமும் அன்னை புத்தகங்களையும், சாவித்ரியும் படிக்கிறது. அதிலிருந்து சற்று குணம் தெரிகிறது.

அண்ணன் - அதைத் தொடர்ந்து செய்யலாம். நீ சொல்கின்ற பெற்றோர், பிரச்சினைக்காக அன்னையிடம் வருபவர்கள். பக்திக்காக வருபவர்களா?

தம்பி - அவர்கள் அன்பர்கள். அவர்கட்குக் குழந்தை முக்கியம். அதைவிட அவர்கள் சேவை முக்கியம்.

அண்ணன் - பிரச்சினைக்காக வருபவர்கட்கு முறைகள் பிரச்சினையைத் தீர்க்கும். அது நாளடைவில் நல்லபடியாக, நிச்சயமாக நடக்கும்.

தம்பி - உடனே நடக்குமா?

அண்ணன் - அது அன்னைக்காக வாழ்பவர்கட்கு நடக்கும். அத்துடன் பிரச்சினை அவர்கட்கு வாய்ப்பாகவும் மாறும்.

தம்பி - இவர்கள் அப்படி மாற முடியாதா?

அண்ணன் - சேவை முதல் என்பது அன்னை முதல் என்று மாறினால், அது நடக்கும்.

தம்பி - அவர்களாக மாற்றிக்கொள்ளக் கூடாதா?

அண்ணன் - மாறக் கூடாது என்பதில்லை. அப்படியெல்லாம் மனம் மாறுவதில்லை.

தம்பி - சரி, அப்படி மாறினால் என்ன நடக்கும்?

அண்ணன் - பிரச்சினை இருக்காது, குழந்தை சந்தோஷமாகி-விடும்.

தம்பி - அதற்கென்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்.

அண்ணன் - நான் சொன்னதுபோல் சமர்ப்பணம் செய்தால், குழந்தை பிரச்சினை தீரும்.

தம்பி - மேலும் செய்யக்கூடியதுண்டா?

அண்ணன் - உண்டு.

தம்பி - என்ன செய்யலாம்?

அண்ணன் - ஆர்வம் உள்ளவரை செய்யலாம். முழு ஆர்வம் அன்னை பேரிலிருப்பதற்கு அடையாளம், இடையாத நினைவு. மனம் அன்னையைத் தானே விரும்பி நினைத்து, நினைவில் திளைத்தால், பிரச்சினை இருந்த இடம் தெரியாது.

தம்பி - 'இடையறாத நினைவு' கட்டுரையிலுள்ளதைப்போல் மாறிவிட்டால்,

அண்ணன் - அது யோக நிலை. அதுபோல் பெற்றோர் மாறினால் குழந்தை நாடெங்கும் பிரபலமாகும். இன்று எதை யாரும் குழந்தைக்குக் கற்பனை செய்ய முடியாதோ, அது நடக்கும்; நடந்தபடியிருக்கும்.

தம்பி - குழந்தை இடையறாத நினைவைப் பெற்றால்,

அண்ணன் - குழந்தை வாழ்வை விட்டு யோகத்திற்குப் போகும். அக்குழந்தையுள்ள இடத்தில் மற்றவர்க்குப் பிரச்சினையிருக்காது.

தம்பி - குழந்தை உலகப் பிரசித்தி பெறுமா?

அண்ணன் - அன்னையை குழந்தையே நான் கூறுவதுபோல் அறிந்து, குழந்தைக்கு இடையறாத நினைவு வந்தால், இந்தக் குழந்தை உலகப் பிரசித்தி பெறும் என்பது உறுதி. அவ்வுறுதியை உறுதிப்படுத்த இரண்டு நிபந்தனைகளுண்டு.

1. முழு உடல் நலம். Total perfect health, a body sound as a bell.
2. தானே பொங்கிவரும் சந்தோஷம். Self-existent joy.

தம்பி - இக்குழந்தைக்கு இதைச் செய்ய நான் துடிக்கிறேன். அதாவது,

- ❖ அன்னையைப் பூரணமாக அறிந்து, ஏற்றுக் கொண்டு, நம்ப வேண்டும்.
- ❖ இடையறாத நினைவு வேண்டும்.
- ❖ உடல் வெண்கலம் போலிருக்க வேண்டும்.
- ❖ மனம் பூரிப்பான நிலையிலிருக்க வேண்டும்.

அண்ணன் - இவையெல்லாம் முடியும், பகீரதப் பிரயத்தனம். இன்று அதுபோன்ற குழந்தை உலகில் இல்லை. இக்குழந்தை மாறினால் அது உலகத்திற்கு மகுடம். பெரிய காரியம். உன் அவசரம் உதவாது. நிதானம் வேண்டும்.

தம்பி - வார்த்தை பலிக்கிறது என்கிறார்களே, அது என்ன?

அண்ணன் - நடப்பனவெல்லாம் நாராயணன் செயல் என அறிவோம். நாம் குறுக்கிட்டால் காரியம் கெட்டுப் போகிறது. குறுக்கிட நம்மில் எதுவுமில்லை எனில், உள்ளிருந்து எழும் வார்த்தை நாராயணன் வார்த்தையாகிறது. அதனால் பலிக்கிறது.

தம்பி - காரியம் கூடிவர நாம் குறுக்கிடாமலிருந்தால் போதுமா?

அண்ணன் - Mother is a subtle institution அன்னை ஒரு சூட்சும ஸ்தாபனம் என்றது நினைவிலிருக்கிறதா? அந்த ஸ்தாபனம், குறிப்பாக அன்பர்கள் வாழ்வில், இடையறாது செயல்படுகிறது. நாம் குறுக்கிடா-விட்டால் பலிக்கிறது. 'நான்' வந்து குறுக்கிடாத-வருடைய வார்த்தை பலிக்கிறது.

தம்பி - நாம் குறுக்கிடாமலிருப்பதற்கு அடையாளம் உண்டா?

அண்ணன் - நமக்கு விஷயமே தெரியாதபொழுது செயலோ, மனமோ குறுக்கிடுவதில்லையல்லவா? விஷயம் தெரிந்தபொழுது அதுபோல் மனமும் (mental impulse) குறுக்கிடாவிட்டால் அதுவே அடையாளம்.

தம்பி - குறுக்கிட்ட பின் வழியுண்டா?

அண்ணன் - Mental impulse மன எழுச்சி வந்து மனத்தைத் தொடுமுன் சமர்ப்பணம் செய்ய வேண்டும். அது சிரமம் ஆனால் முடியும். விஷயம் எழுமுன் குறுக்கிடுவதில்லை என முடிவு செய்து முடிவைச் சமர்ப்பணம் செய்தால், அது சமர்ப்பணமானால், குறுக்கீடு எழாது.

தம்பி - வார்த்தை பலிக்கிறது எனில், அவர் மனம் எப்பொழுதும் அதுபோன்ற அமைதியுடனிருக்கும் போலிருக்கிறது.

அண்ணன் - ஆம். நாம் முயன்று பெறும் அமைதியை அவர் இயல்பாகப் பெற்றுள்ளார். நல்லெண்ணம் உபரியாக இருந்தால், நடக்க வேண்டிய செயல் அவர் நல்லெண்ணத்தில் உற்பத்தியாகும் வார்த்தை மூலம் பலிக்கிறது.

தம்பி - நீங்கள் சொன்ன சக்தி, ஸ்தாபனம் இங்கு எப்படிச் செயல்படுகிறது?



அண்ணன் - தெருவில் கலாட்டாவானால், போலீஸ்காரனைக் கூப்பிடுகிறோம். அவனைக் கண்டவுடன் கலாட்டா மறைகிறது. போலீஸ் என ஒன்றிருக்கிறது. வேண்டியவர் கூப்பிடுகிறார்கள். IG ஆபீசில் போலீசைக் கூப்பிட வேண்டிய அவசியமில்லை. கலாட்டா செய்பவர்கட்கு அது IG ஆபீஸ் எனத் தெரியும். கலாட்டா செய்யமாட்டார்கள். கலெக்டர் ஆபீசும் அப்படியே. எல்லாக் கவர்மெண்ட் ஆபீசுக்கும் அத்தகுதியுள்ளது என்பதால் கலாட்டா செய்பவர்கள் அங்கெல்லாம் வரமாட்டார்கள்.

தம்பி - நாம் கூப்பிடும்பொழுது மட்டும் அன்னை வருகிறார். அன்னையை மனதில் பிரதிஷ்டை செய்துவிட்டால், அன்னைச் சூழல் எப்பொழுதும் நம்மைச் சுற்றியிருக்கும். அன்னையை அழைக்க வேண்டிய அவசியமிருக்காது. வேலை சமர்ப்பணமாகும். அன்னை ஸ்தாபனங்களில் புறச் சூழலில் அன்னை நிறைந்திருப்பார். நெஞ்சில் பிரதிஷ்டை செய்தால் அகச் சூழலில் அன்னை இருப்பார். கூப்பிடும் அவசியமில்லை.

அண்ணன் - புறச் சூழலிலிருப்பது அன்னை எனும் ஸ்தாபனம். அகச் சூழலிலிருப்பது அன்னை எனும் ஸ்தாபனம் என்றாலும் அது ஆன்மாவுக்குரிய ஸ்தாபனம். இரண்டும் சேர்வது பெரியது.

தம்பி - அகந்தை என்னாவது?

அண்ணன் - அகந்தை கரைந்தால்தான் அகச் சூழல் நிறையும். அன்னையின் சூழல் உலகில் அன்னை அவதரிக்கும்

முன்னேயுண்டு. அவர் அவதரித்த பிறகு அது அதிகமாயிற்று. அவர் வாழ்ந்த இடத்திலும், அவர் அன்பர்கள் உள்ள இடத்திலும் சூழல் ஸ்தாபனமாக வேலை செய்கிறது. போலீஸ் ஸ்டேஷன் உள்ள இடத்தில் போலீஸ் உள்ளது. இல்லாத ஊரில் மணியக்காரர் மூலம் போலீஸ் வேலை செய்யும். நேரடியான அதிகாரமிருக்காது. அதுபோல் அன்னை அன்பர்கள் அவர்களுடைய ஸ்தாபனமாகச் செயல்படுகிறார்கள். உலகம் உற்பத்தியானதிலிருந்து உலகெங்கும் இருப்பது அன்னைச் சூழல்தான் என்றாலும், அளவு மாறுகிறது.

தம்பி - அன்னை ஜீவியம் நம் குறைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் செயல்படுவதெப்படி என மேலும் விவரமாகச் சொல்லவும்.

அண்ணன் - கார் ரிப்பேர் ஷாப்புக்குப் போனால், நமக்கு எந்தவித ரிப்பேர் தேவையானாலும் செய்து தரும் வசதியை வைத்திருக்கிறார்கள். அது கார் ரிப்பேருக்காக என்று ஏற்பட்டது. ஓர் இன்ஜீனியரிங் ஒர்க்ஷாப்புக்குப் போனால், அவன் நம் காரில் உள்ள ரிப்பேரைச் சரி செய்ய வேண்டுமானால் அவனுக்கு முடியும். காரை ரிப்பேர் செய்ய ஏற்பட்ட இடமில்லை என்றாலும் இன்ஜீனியரிங் ஒர்க்ஷாப் என்பதால், கார் வேலையையும் அவர்களால் செய்ய முடியும். கார் வேலை இன்ஜீனியரிங்க்கு உட்பட்டதுபோல், வாழ்வில் எப்பகுதியும் அன்னைக்குட்பட்டது. எந்தத் தேவை நமக்கெழுகிறதோ, அதற்கேற்ப அன்னைச் சூழல் மாறும் திறனுடையது.

தம்பி - ரெவின்யூ டிபார்ட்மெண்ட் போலவா?



அண்ணன் - எந்த டிபார்ட்மெண்ட்டும் தன் வேலையை மட்டும் செய்யும். ரெவின்யூ டிபார்ட்மெண்ட் மட்டும் எந்த நேரத்திலும் எந்த வேலையையும் செய்ய அழைப்பார்கள். அவர்களும் செய்வார்கள். எலெக்ஷன், வெள்ளம், கலவரம், பரீட்சை, ஸ்டிரைக் என எதுவும் அவசரத்திற்காக ரெவின்யூ டிபார்ட்மெண்டாரிடம் கொடுப்பார்கள்.

தம்பி - IAS ஆபீசர்போல எந்த டிபார்ட்மெண்ட்டுக்கும் அன்னைச் சூழல் போகும் போலிருக்கிறது.

அண்ணன் - ஒரு டிபார்ட்மெண்டில் பிரமோஷனில் வந்தவர்களை விட IAS ஆபீசர்கள் பாரபட்சமின்றி, வேலையைச் சிறப்பாகச் செய்வதாகக் கூறுவதைக் கேட்டதுண்டா?

தம்பி - அதுபோல் அன்னைச் சூழல் ஏதாவது ஒரு செயலுக்காக தன்னை அதற்கேற்ப மாற்றிக்கொண்டு செயல்படும்பொழுது சாதாரணச் செயலைவிட அது சிறப்பாக இருக்குமா? உதாரணம் உண்டா?

அண்ணன் - அன்பர் ஒருவர் புதியதாக ஒரு துறையில் செயல்பட்டார். பாங்க் அத்துறையில் சம்பந்தப்படாதது. அன்னை செயல்பட்டார். அத்துறைக்குப் பாங்க் வந்தது. அற்புதமாகச் செயல்பட்டது. அதன் விசேஷங்கள் பல.

1. அத்துறைக்கு வழக்கமான வட்டியைவிட வட்டி குறைவு எனச் சட்டம் வந்தது.
2. சில அம்சங்கட்கு வட்டியுமில்லை என்றார்கள்.
3. ஓரளவு மானியம் உண்டு என்ற நிலையும் வந்தது.
4. ஈடில்லாமல் கடன் பெறும் விஷயங்களும் எழுந்தன.

தம்பி - ஆமாம், எனக்குத் தெரியும். இவையெல்லாம் அன்னையின் சிறப்பல்லவா?

அண்ணன் - அன்னைக்கேயுரிய சிறப்பு இத்துறையில் எழுந்தது. பொதுவாக பாங்க் ஒரு துறையில் செயல்பட்டால் அத்துறை பயன்பெறும். இத்துறை பாங்க்குக்குப் பயன்படுத்தும்படி ஏராளமான டெபாசிட்டைக் கொடுத்தது.

தம்பி - சத்தியஜீவியம் செயல்பட்டால் கருவியும் திருவுருமாறும் என்கிறார் அன்னை.

அண்ணன் - யார் பலனை மட்டும் பெறுவார்களோ, அவர்களால் பாங்க்குக்குப் பலன் பெருவாரியாக எழுந்தது.

தம்பி - அது என்ன சட்டம்?

அண்ணன் - அது திருவுருமாற்றத்தைக் கடந்த நிலை, அருளன்று, பேரருள். இதுபோன்ற அம்சம் அன்னையுள்ள எல்லா இடங்களிலும் காணலாம். அதைத் தத்துவரீதியாக நாம் அறிவது அன்னை ஞானம்.

தம்பி - யாராவது எடுத்து உதாரணத்தின் மூலமாகச் சொன்னால் புரியும். அதிகம் படித்த குழந்தை உலகப் பிரசித்தி பெறலாம் என்றீர்களே, அது எப்படி? Genius மேதையாகப் பிறந்திருக்க வேண்டாமா?

அண்ணன் - அமெரிக்காவில் வீடு பெருக்குபவளும் காரில் வருகிறாள். நமக்குக் கார் பணக்காரனுக்கு. நமக்கு அதிகபட்சம், அமெரிக்காவில் குறைந்தபட்சம். அன்னை வாழ்வு அன்னையின் கோட்பாடுகளை ஏற்ற வாழ்வு. Mother first, anything next அன்னையை முதன்மையாகக் கொண்ட வாழ்வில் மனித வாழ்வின் உச்சக்கட்டம், அங்குக் குறைந்த-பட்சம் என்பது சட்டம்.



தம்பி - என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. நம்ப முடியவில்லை. ஏழ்மை நிறைந்த கிராமம் அன்னையை ஏற்றுக்கொண்டு செல்வம் நிறைந்த கிராமமாக மாறியதைப் பார்த்தேன். இருந்தாலும் மனம் சம்மதப்படமாட்டேன் என்கிறது.

அண்ணன் - அதைத்தான் நான் அன்னையைப் புரிந்துகொள்வது என்றேன்.

தம்பி - சரி, இந்தக் குழந்தை உலகப் பிரசித்தி பெறுமா?

அண்ணன் - எந்தக் குழந்தையும் 11 வயதில் நிரூபமா பெற்றதைப் பெற்றிருந்தால், அன்னையை ஏற்றால், உலகப் பிரசித்தி பெறும். நமக்குப் பணம், அந்தஸ்து, செல்வாக்கு, புகழ், பிரபலம் முக்கியம். அதனால் அது கோடியில் ஒருவருக்கு என நினைக்கிறோம்.

தம்பி - அதுபோல் புரியும்படி அன்னையைச் சொல்லுங்-களேன்.

அண்ணன் - அன்னையை ஏற்றுக்கொண்டால், அன்னை நம்மை அன்னையாக்குகிறார்.

தம்பி - நம்ப முடியவில்லையே.

அண்ணன் - நம்புவது சிரமம். விஷயமே நம்பிக்கையில்தான் இருக்கிறது. நாம் அன்னையை வணங்குகிறோம். அன்னை நம்மைத் தம்போலச் செய்கிறார்.

தம்பி - முடியுமா?

அண்ணன் - நமக்கு அது பிடிக்கவில்லை என்கிறார் அன்னை. சாவித்ரியில்,

*'எந்த அற்புதத்தை மனம் விழைகிறதோ அதை மனிதன் மறுக்கிறான்'.*

*'தான் விரும்பும் கொடுமைக்குக் கடவுளை நிந்தனை செய்கிறான்' என இரு வரிகள் உள்ளன.*

நம்ப முடியவில்லை என்கிறோம். உண்மையில் அன்னை வாழ்வின் உயர்வு நமக்குப் பிடிக்கவில்லை.

தம்பி – இந்தக் குழந்தை நிலை என்ன?

அண்ணன் – இது சாதாரணக் குழந்தை. அற்புதமான பயிற்சி. அபரிமிதமான வெற்றி. பெற்றோர் சேவை உணர்வு உள்ளவர்கள். சேவை பெரியது. ஆனால் சேவையால் நான் சொல்லும் பலன் வாராது. அன்னையைக் குழந்தை ஏற்க முடியும். அது நடந்தால் நான் சொல்வது நடக்கும். பெற்றோரும் ஏற்றால் பெரியது.

தம்பி – நான் அன்னையை ஏற்றுக்கொண்டுள்ளேனே?

அண்ணன் – முதலில் அன்னை என்றால் என்ன என்று அறிய வேண்டும். நான் சொன்ன சாவித்ரி வரிகள் பக்கம் 365இல் இருக்கிறது. நான் கூறவில்லை. பகவான் எழுதுகிறார். பகவான் நாமெல்லாம் உலகப் பிரசித்தி அடைய முடியும் என்று கூறவில்லை. மனிதன் சத்தியஜீவனாக முடியும் என்கிறார். அது சிவபெருமானைவிட உயர்ந்த நிலை. அது பூரணயோகம். நான் சொல்வது பூரணயோக சக்தியை வாழ்வில் சிறப்பாகப் பயன்படுத்துவது.

*தொடரும்...*

❋ ❋ ❋





## P.439 We make of our own enemies our guests.

எதிரியை விரும்பி விருந்தினராக்குகிறோம்.

தான் வகித்த பெரிய பதவியை தன் மகன் வகிக்க விரும்பி மகனுடைய ஜாதகத்தை பிரபல ஜோஸ்யரிடம் கொடுத்தார். இந்த ஜாதகன் பெற்றவரை வீட்டைவிட்டு வெளியே அனுப்புவான் என்று கூறினார்.

- **மகள் எனவும் பாராமல் அவள் கணவனை இழந்து 30 நாள் சாப்பிடாமலிருக்கும்பொழுது, அவளிடம் வந்து கணவன் இறந்ததினால் வந்த பணத்தை இனாமாகக் கேட்கும் தாயாரும், தகப்பனாரும் பெற்றோரில்லை. மகளுக்கு அவர்கள் மீதுள்ள பாசம், அவள் செய்யும் சேவை, பாசமில்லை, பாவம், அது சேவையில்லை, தன்னையே அழித்துக்கொள்வதாகும்.**
- **மனிதன் நல்லதை நாடவில்லை. தனக்கு ருசிப்பதை நாடுகிறான். எதுவும் ருசிக்கும். மது ருசிப்பதைப்போல், தவறானது ருசிக்கும். எதிரியை விரும்பி நாடுபவன் எதிரியின் பொல்லாத குணத்தைப் போற்றுபவன்.**
- **19ஆம் வயதில் தன்னை வீட்டை விட்டு விரட்டியவர் தகப்பனாரில்லை. அவருக்குரிய கடமை என்று ஒன்று நமக்கில்லை. என்னை வீட்டைவிட்டு விரட்டினாலும் தகப்பனார் தகப்பனாரே என்றவர் தகப்பனார் இறந்தபின், அந்த ஆவிக்குச் செய்த கரும காரியங்கள் அவர் வாழ்வின் சாதனையை அடிமட்டமாக்கின.**
- **கணவன் சாகப் பிழைக்கக் கிடக்கிறான் என்று அன்னையை**

**ஒரு ஜெர்மானியப் பெண் அழைத்தாள். இவன் மனைவியைக் கொடுமைப்படுத்தியதால் உயிர் வதைகிறான். கணவன் பிழைத்துக்கொண்டான். முதற்காரியமாக மனைவியை அதிகமாகக் கொடுமைப்படுத்தினான்.**

**“உனக்கு நல்லது, கெட்டது என்ற பாகுபாடில்லை” என்று அன்னை அப்பெண்ணைப் பற்றிக் கூறினார்.**

**எதிரியின் கெட்ட குணத்தை மீறி அவனுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பது பெருந்தன்மையில்லை, அவன் கெட்ட குணத்தின் மீதுள்ள நம் கெட்ட குணத்தின் பிரியம். நமது நல்ல குணம் நல்லதானால், வலிமையும் பெற்றதானால், நாம் செய்யும் உதவியால் நமக்குக் கெடுதல் வாராது, பெருமைக்காகச் செய்தால் அழிவு வரும்.**

**“மனிதா, இந்த அழிவைத் தேடாதே” என்று அசரீரியாக பகவான் இதுபோன்றவரை எச்சரிக்கிறார். “இந்த அழிவு மலை போன்றது, உனக்குத் தாங்காது” எனவும் கூறுகிறார்.**

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

திறமைகளை முறையோடு பெற்றவன் (decisions) முடிவுகளை முறைப்படுத்த முன் வந்தால், அது முடிந்து செறிவடையும் தருணம், உடலுழைப்பிலிருந்து, மனத்தின் திறனுக்கு நிலையாக வருவான்.

முடிவான சுதந்திரத்தில் முடிவான சித்தி கிடைக்கும்.





# புலன்களுக்குப் புலப்படாதது

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

*இல. சுந்தரி*

“இந்த ஆண்ட்டியைத் தெரியுமா உனக்கு?” என்றாள் லட்சுமி.

“ஓ! தெரியுமே. கனவுல பாட்டியுடன் வந்தாங்களே” என்றாள்.

குழந்தை தன் பாட்டியைப் பற்றிய கற்பனையில் இருப்பதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தனர்.

மீராவைப் பற்றிய சிறிய அறிமுகத்துடன் கதையைத் தொடர்வோம்.

மேலை நாட்டினரான இவள் பெற்றோர் அன்னை மீது கொண்ட பக்தியால் ஆன்மீக மண்ணாகிய இந்திய மண்ணில் அன்னை கொண்ட மீரா என்ற பெயரையே இவளுக்கு இட்டனர். அன்னையின் பெயரை ஏற்றதாலோ என்னவோ இவள் மேனாட்டு நாகரிகத்தில் மூழ்கி, வாழ்வை செயல்மயமாக்காமல் அதியற்புத உயர் உணர்வுகளுடன் வளர்ந்தாள். ஆன்மீக நாட்டம் கொண்டு அன்னையின் தெய்வீகப் பணிகளில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் ஆர்வத்துடன்தான் இந்தியா வந்தாள். ஆண்டிற்கு ஒரு முறை அமெரிக்கா சென்று பெற்றோரைக் கண்டு வருவதுடன் பொருளும் ஈட்டி வருவாள். தவறாது மருத்துவமனையில் துன்புறும் நோயாளிகளுக்கு அன்னையின் அருளை எடுத்துச் சொல்லி, ஆறுதல் செய்வாள். இவளின் அன்பான உரைகளை, அன்னையின் கருணையைக் கேட்டு நோயாளிகள் அமைதியும், ஆறுதலும் பெறுவார்கள்.

அவ்வாறு சென்றபோதுதான் அமிர்தாவின் பாட்டியார் தம் கணவரும், மகனும் இறந்த சோகத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு நோயாளியாகிவிட்டிருக்கிறார் என்பதும், மருத்துவமனையில்

இருக்கிறார் என்பதும் தெரியவந்தது. வழக்கம்போல் மருத்துவமனைக்குச் சென்று நோயாளிகளைக் கண்டு அன்பும், ஆறுதலும் காட்டியபோது, அமிர்தாவின் பாட்டி, தாமும் தம் பேத்தியும் அனாதைகளான கதையைக் கூறி அழுதார். நாளுக்கு நாள் மோசமாவதையும், தமக்கு ஏதும் நேருமுன் தம் பேரக் குழந்தையைப் பொறுப்பான இடத்தில் சேர்த்து, தம் சொத்துகளையும் அக்குழந்தையின் பேரில் சேர்த்துவிட்டால் தமக்கு மனவமைதி கிட்டும் என்றார்.

மீராவின் அன்பும், அவள் கோட்பாடுகளும் அமிர்தாவின் பாட்டியாரைக் கவர்ந்தன. மேலும் மீரா இந்தியாவில் வசிப்பதால் தனக்கு அவள் உதவ முடியும் என நம்பினாள்.

மீராவே தன் பேரப்பெண்ணைத் தன் பொறுப்பில் ஏற்று வளர்க்க வேண்டுமென்றும், அக்குழந்தைக்கு உரிய பருவம் வரும் வரையிலோ, தேவைப்பட்டால் எப்பொழுதுமோ அவள் சொத்துகளுக்குப் பொறுப்பேற்க வேண்டினாள். அன்னையை வேண்டி, இறுதித் தருவாயிலிருக்கும் அந்தச் சீமாட்டியின் துன்பம் போக்க ஒப்புக்கொண்டாள். அங்கேயே சட்ட நிபுணரை வரவழைத்து, மீராவை அமிர்தாவின் நற்பொறுப்பாளராக்கினாள். தன்னுடன் மீராவின் நட்பை உறுதிப்படுத்தும் வகையில் மருத்துவமனையில் மீராவைத் தன் அருகில் நிற்கவைத்துப் புகைப்படம் எடுத்து, அதையும், அவளைக் கார்டியனாய் நியமித்துள்ள விபரங்களையும் எழுதி, ராமையாவுக்கு அனுப்பி வைத்தாள். அமிர்தாவின் பாட்டியார் கேட்டுக்கொண்டதால் அவருடன் இறுதிவரை தங்கி, தன்னாலியன்ற உதவிகளைச் செய்தாள் மீரா. மிகுந்த மனநிறைவுடன் அவள் பாட்டியார் உயிர் பிரிந்தது.

*தொடரும்...*

❋ ❋ ❋

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12 First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

# DRO பென்ஷன்

அன்னையைப் பொருத்தவரை அநேக சட்டங்களுண்டு. அவற்றுள் ஒன்று,

**தூரப் போய் மறந்துபோனால் அதிர்ஷ்டம் அதிகமாக வரும்.**

அருகிலிருக்கும்பொழுது அன்னையைப் பற்றியும், அன்பர்களைப் பற்றியும் reaction கோபம் வரும் நேரம் அடிக்கடி எழும். ஒரு முறை கோபம் வந்தாலும், அருள் நிரந்தரமாகத் தடைப்படும். தூர இருக்கும் பொழுது அன்னை மேல் பக்தியிருக்கும், கோபம் வரும் சந்தர்ப்பமிருக்காது. அதனால் அருள் கெட்டுப்போகாது.

வாட்ச்மேன் மனைவி வீட்டு வேலை செய்பவள். அன்பர் வீட்டில் வேலை செய்தாள். அற்புதமாக வேலை செய்வாள். மாதம் 10 நாள், 20 நாள் வரமாட்டாள். Receptivity ஏராளம். அவளுக்கு அது தெரியாது. தரிசன நாட்களில் அவள் முகம் போல் எந்த பக்தர் முகமும் பிரகாசமாக இருக்காது. சமாதிக்குப் போனதேயில்லை. விஸ்வாசமே இல்லாதவள். கணவன் 1400 ரூபாயில் ரிட்டயரானார். பென்ஷன் அதில் பாதி. வீட்டு வேலையையும் விட்டுவிட்டாள். அரிசி வியாபாரம் செய்தாள். நிலைமை மாறிக்கொண்டே வந்தது. இவையெல்லாம் அருளால் என யாராவது சொன்னால் அவளால் நம்பவும் முடியாது. சமீபத்தில் அவள் கூறியவை,

- *வீடு கட்டி, போன் வைத்திருக்கின்றேன்.*
- *மருமகன் - பேத்தியின் புருஷனுக்கு - 40,000 ரூபாய்க்கு மோட்டார் பைக்*
- *கணவன் இறந்தபிறகு எனக்கு வரும் பென்ஷன் இன்று ரூ.2,500/-.*
- *கணவனுக்கு தியாகி பென்ஷன் உண்டு. அது ரூ.2,500/-.*

அவள் பென்ஷனாக இன்று பெறும் தொகை DROவின் மனைவி பெறும் family பென்ஷன். அன்னையை விட்டு வெகுதூரம் போனால், அவரை மறந்துபோனால், அன்று அருளாகப் பெற்றது தொடர்ந்து அளிப்பவை ஏராளம். அருகிலுள்ளபொழுது அன்னை மீதும், அவரருகிலுள்ளவர் மீதும் எழும் கோபம் அருளை ரத்து செய்கிறது. தூர இருப்பது அதிர்ஷ்டமாகிறது.

* * *

# நல்லெண்ணம்

''நான் சில நாட்களாக நன்றாக இருக்கிறேன். நேற்றிலிருந்து சந்தோஷம் பொங்கி வழிய வேண்டும் என்று சொல்வதை உறுதிபடுத்துவது போலிருந்தது. எல்லாம் நல்ல சேதியாக இருந்தது. இன்று காலையிலும் சந்தோஷமாகத்தான் எழுந்தேன். 8 மணியிலிருந்து 8 தப்பான செய்திகள் வந்துவிட்டன. மனம் குமுறுகிறது. அழுகையாக வருகிறது. உடம்பு களைத்துப் போகிறது. என்ன என்று தெரியவில்லை'' என்று தங்கையிடம் தமக்கை கூறினாள்.

தங்கை தமக்கையிடம், ''நீ கட்டியிருக்கும் புடவையை மாற்று'' என்றாள். புடவையை மாற்றியவுடன் சோகம், வருத்தம் போய், சந்தோஷம் வந்துவிட்டது.

அக்காவுக்கு ஆச்சர்யம். தங்கை விளக்கம் கூறினாள், ''உன் ஆத்மார்த்த தோழியைப் பற்றி எதுவும் சொன்னால் உனக்குப் பிடிக்காது. அதனால் நான் சொல்வதில்லை. ரொம்ப நாளாக நான் உன் தோழியைக் கவனித்து வருகிறேன். உன்னிடம் நெருக்கமாக இருப்பவர். உன்னைப் பாராட்டிப் பேசுபவர். அவர் வாங்கிக் கொடுத்த பரிசு இப்புடவை. உன்னையே மதர் என்றும் கூப்பிடுபவர். சென்ற முறை அவர் வந்தபொழுது உனக்கு ஜுரம் வந்தது. உன் வாழ்க்கை சிறப்பானது. அன்பாகவும், அடக்கமாகவும் பழகுபவர். ஆனால் இவர் வரும்பொழுதெல்லாம் உனக்கு ஏதாவது வருகிறது. உனக்கு அவர் மீது பிரியம் என்பதால் அவர் ஆழ்ந்த நினைப்பு உனக்குத் தெரிவதில்லை''.

நாம் பிறருடன் பழகும்பொழுது தோற்றத்தைக் கடந்து பார்க்க முடிவதில்லை. நல்லவர்கட்கு நல்ல பழக்கம் உண்டு. கெட்டவர்கள் கெட்ட குணத்தை மறைக்க நல்லவர்களாக நடிப்பதை நாம் புரிந்துகொள்ள முடிவதில்லை.

- *பொறாமையே உருவானவர் ''எனக்குப் பொறாமை இல்லை'' என்பார். இவர் போகுமிடமெல்லாம் கெட்டது நடக்கும்.*
- *பொய்யை புத்திசாலித்தனமாகச் சொல்பவர் பொய்யே சொல்லாதவர் எனப் பெயர் பெற்றிருப்பார்.*
- *இவர்களுக்கு வீட்டில் ஒரு நல்லது நடந்துவிட்டால் குணம் வெளிப்படும், அடக்கம் போய் அகங்காரம் எழும்.*
- *தன்னை மிகமிக உயர்வாக நினைப்பவர், மிக மட்டமானவராக இருப்பார். இவரைப் பார்த்துவிட்டுப் போனால் பலரும் திட்டுவார்கள்.*
- *பச்சையாகப் பொய்யைப் பிரியமாக முகஸ்துதியாகப் பேசிவிட்டு, பின்னால் போய் வேட்டு வைப்பார்.*

அவர்கள் குறை நம்மை பாதிப்பது உண்மை. அவர்கள் மீது நமக்குள்ள பிரியம் அக்குறையை நாம் போற்றுவதால் வருவது. நம் குறை அவர் குறையை ஏற்று ஆமோதிக்கிறது என்பதே உண்மை.

**நல்லெண்ணம் அரிது. நமக்கு நல்லெண்ணமிருக்கிறதா என நமக்குத் தெரியும். பிறர் அனைவரும் அதை ஏற்றபொழுதும், அதனுள் உள்ள குறை நமக்குத் தெரியும். நல்லெண்ணம் நல்லெண்ணமாக இருக்க மனதில் பொய்யிருக்கக்கூடாது. மனதில் பொய் கரைந்துபோனால் வேஷம் போட முடியாது.**

* * *